# வக்கீல்

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

MADRAS LAW JOURNAL ... OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - JAN 1958

1957


இதழ் 4

**இந்த இதழில்**

நன்றி
சம்பளத்தைக் குறை
பொறுமை!
1957—ம் வருடத்திய மத்தியச் சட்டங்கள்
சென்னை நிலச்சாகுபடி உத்தரவு (1957)
இந்து சுவீகார—ஜீவனாம்சச் சட்டம் (1956)
வழக்கும்—தீர்ப்பும்
கேள்வி—பதில்

விலை 40 நயாபைசா

(All Rights Reserved.)



ரஸாக்...

THE VAKIL ✶ TAMIL LAW MAGAZINE

## " வக்கீல் "

பொது மக்களுக்கான
உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

குறிப்பு: "வக்கீல்" பத்திரிகை 1949 எப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. மாதப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது "வக்கீல்" பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களேயும் விதிகளேயும் எளிய தமிழில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை. வழக்கும் — தீர்ப்பும்; கேள்வி — பதில்; வரிகள்; தொழிலாளர் பகுதி போன்ற பல அம்சங்கள் உண்டு.

### ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L., M.L.A.
" A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
" S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
" T. S. வெங்கடராமன் B.A., B.L.,
" R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
" R. கோபாலசாமி, B.A., B.L.,
" C. R. வீரராகவன், M.A., B.L.,
" R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
" P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
" S. சந்தானம், B.A., B.L.,
" V. S. விஜயராகவாச்சாரி, B.A., B.L.,
[ ஆசிரியர் ]

## 1-4-57 முதல் " வக்கீல் " சந்தா விபரம்

தனிப்பிரதி 40 நயா பைசா. வருட சந்தா ரூ. 4—50. ஷை வெளிநாடு இலங்கை உள்பட ரூ. 6. ஆயுள் சந்தா ரூ. 100

**சந்தாதார்கள் கவனிக்கவும்:**—"வருட சந்தா" என்பது 12 தொடர்ந்த இதழ்களுக்கான சந்தாவைக் குறிக்கும். 1-4-1957 க்கு முன் சந்தா செலுத்தியவர்களுடைய கணக்கை நயா பைசாவுக்கு மாற்றி 1-4-1957 முதல் மேற் கண்ட புதிய சந்தா விகிதப்படி கணக்குச் செய்து பத்திரிகை அனுப்பப்படும்.

**சந்தாத்தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:**
**மானேஜர், "வக்கீல்" காரியாலயம்,**
**தபால் பெட்டி 26, கும்பகோணம்.**
**(தென் இந்தியா)**
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

## " வக்கீல் "

(விளம்பர விகிதம்)
ஒரு முறை பிரசுரம் செய்ய

| | | |
|---|---|---|
| பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்) | ரூ. | 100 |
| உள் அட்டை முழுப்பக்கம் | ரூ. | 80 |
| உள் பக்கம் முழுப் பக்கம் | ரூ. | 60 |
| ஷை .. அரைப்பக்கம் | ரூ. | 35 |
| ஷை .. கால்பக்கம் | ரூ. | 20 |
| ஒருகாலம் – அங்குலம் | ரூ. | 5 |

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)


வெள்ளைக்கு நறுமண

குணம்
மணம்
சுத்தம்
ஆரோக்கியம்
சிக்கனம்
உடையது.

நறுமண சீயக்காய்த்தூள்
REGD. No. 13817.

உரிமை:
S. பெத்தண்ண நாடார்
.. கீழவாசல்-தஞ்சாவூர்..

சீயக்காய்த் தூள்

ஆடைகளை அழகு பெறச்செய்வது

அன்னகிளி
சோப்

— தயாரிப்பவர் —
**சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்**
P. B. No. 22 :: தஞ்சாவூர்.

சலவைக்குச் சிறந்தது!
எல்லோரும் விரும்புவது!!
விலையில் குறைந்தது!!!

★ சிறந்த சலவைக்கும்
சிக்கனத்திற்கும்

★ ரமர் சோப் ★

தயாரிப்பவர்:—
தி மாடர்ன் சோப் ஒர்க்ஸ்
பாட்ராச்சாரியார் தெரு, கும்பகோணம்.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

# வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 9 ஜூலை — ஆகஸ்டு 1957 இதழ் 4


## நன்றி!

நமது தபால் தந்தி இலாகா ஊழியர்களுக்கு நன்றி! மக்கள் எதிர் பார்த்தபடி இவர்கள் உத்தேசம் செய்த வேலை நிறுத்தத்தைக் கடைசி நிமிடத்தில் கை விட்டனர், பொது மக்கள் எவ்வித அவதி களிக்கும் உட்படவில்லை. இவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியினால், தபால் தந்தி இலாகா மட்டுமல்ல, மத்திய சர்க்கார் ஊழிர்கள் மட்டுமல்ல, எல்லா ராஜ்யங்களிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும், பல்வேறு வகைப்பட்ட பொது ஸ்தாபனங்களிலும் வேலை செய்யும் ஊழியர்களுக்கும் தாரதம்மியமின்றி இன்றைய விலைவாசியில் கட்டுபடியாகக் கூடிய விதம் சம்பள விகிதங்களும் படிகளும் உயர்த்தப் படுமென நம்புகிறோம். கீழே இருக்கும் சிப்பந்திகளைப்பயமுறுத்தி காக்காய்பிடித்து மேலே வந்த சில உயர் தர உத்தியோகஸ்தர்களை மட்டில் வைத்து கொண்டு சர்க்காரை நடத்திவிடலாம் என்ற எண்ணத்தை நமது சர்க்கார்கள் கைவிட்டு விடுவார்கள் எனவும் நம்பு கிறோம்.

## சம்பளத்தைக் குறை.

சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்கள் நிர்ணயம் செய்யப்படும் இச் சந்தர்ப்பத்தில் சர்க்காரில் வேலை செய்யும் ஒரு ஊழியருக்குக் குறைந்த பட்சம் சம்பளம் எவ்வளவு, உயர்ந்த பட்ச ஊதியம் எவ்வளவு என்று இரண்டையும் நியாயமான முறையில் நிர்ணயம் செய்வதும் அவசியமாகும், மிதமிஞ்சி மிக அதிகச்சம்பளங்களும் படிகளும் வாங்கும் அதிகாரிகளின் எண்ணிக்கை குறைந்தாலே, கீழ்ப்படிகளில் ஒரு மன நிம்மதியாவது ஏற்படுமென நினைக்கிறோம்.

ஆனால் நமது சர்க்கார் மேலே இருப்பவர்களின் சம்பளத்தை குறைப்பார்களா?

## பொறாமை!

தனி மனிதர்களுக்குள் பொறாமை இருப்பது போலவே ராஜீயக்கட்சிகளுக்குள்ளும் பொறாமை இருக்கிறது போலும். கேரளத்தில் கம்யூனிஸ்டுக்கட்சி சர்க்கார் நடத்துகின்றது. அத்துடன் இல்லை. நன்றாகவும் சர்க்கார் நடத்துகின்றது! இதைக் காங்கிரசுக்கட்சி சகித்துக் கொண்டு இருக்குமா? காங்கிரசு அதிகாரி ஒருவர் தாமாகவே கேரள ராஜ்யத்திற்குப்போய், அங்கே அராஜகம் தலைகாட்டுவதாக ஒரு அறிக்கை வெளியிட்டார். காங்கிரசுக் கட்சி எதற்கு அடிகோலுகின்றது? ஒரு வேளை திடீரென்று கேரள ராஜ்யத்தில் அமைதிக்குறைவும் நெருக்கடியான நிலைமையும் ஏற்பட்டு விட்டதெனக் கண்டு நமது ஜனாதிபதி அவர்கள் கேரளராஜ்யத்தில் கம்யூனிஸ்டுச்சர்க்காரைத் தள்ளி விட்டுத் தாமே, ராஜ்ய பாரத்தை ஏற்றுக் கொள்ள பேசுகிறார்களா என்று மக்கள் நினைத்தனர். அதற்குள் வேறு ஒரு சம்பவமும் ஏற்பட்டது. நமது ஜனாதிபதி அவர்களே சமீபத்தில் கேரளராஜ்யத்திற்கு விஜயம் செய்து, அங்கு சில தினங்கள் தங்கினர். அத்துடன் இல்லை, கம்யூனிஸ்டு கட்சியானது கேரளத்தில் திருப்திகரமாக ராஜ்யம் நடத்துவதாகவும் அன்னார் புகழ்ந்துவிட்டனர்! காங்கிரசுக்கட்சிக்கு இது புண்ணில் புளியைக் கரைத்து விட்டது! ஜனாதிபதி அவர்கள் இவ்விதம் சொன்னது சரியா, என கட்சிக் கூட்டத்தில் இவர்கள் விவாதம் செய்யப் போகிறார்களாம்!

# 1957-ம் வருடத்திய மத்தியச் சட்டங்கள்

## புதிய சட்டங்கள்

### சுருக்கியும் - வரிசையாகவும்

. [இப்பகுதியில் இருப்பவை டில்லியிலிருக்கும் நமது இந்திய யூனியன் பார்லிமெண்டு சபையில் நிறைவேற்றப்பட்ட மத்தியச் சட்டங்கள். சென்னை ராஜ்யத்திற்கு சம்பந்தமில்லாத சட்டங்கள் நீங்கலாக, மற்ற மத்தியச் சட்டங்கள் இங்கே வரிசையாகவும் சுருக்கியும் விளக்கப்பட்டிருக்கின்றன. பிராக்கெட்டுக்குள் இருக்கும் தேதி ஜனாதிபதி அவர்களால் அச்சட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதியைக் குறிக்கும். மிக முக்கிய சட்டங்கள் தனியாகவும் விவரமாகவும் "வக்கீலி"ல் விளக்கப்படும்.]

187746

### 1—3 அரசாங்கச் செலவு அனுமதிச் சட்டங்கள்

### 5. நிதிச் சட்டம்

(29-3-1957) 1957—58 நிதி வருடத்தில் முந்திய நிதி வருடத்தில் இருந்தது போலவே வருமான வரியும் (இன்கம்டாக்ஸ்) சூபர் டாக்ஸ்வரியும் விதிக்கப்படுமென்ற சட்டம். (சென்ற வருடத்திய வருமான வரி விகிதங்கள் "வக்கீல்"—1956 இதழ் (3)ல் விளக்கப்பட்டிருக்கின்றன.)

### 6. ரயில்வேச் செலவு அனுமதிச் சட்டம்

### 7. லஞ்சத் தடைச் சட்டத் திருத்தம்

(29-3-1957) சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குவதைத் தடை செய்வதற்காக சில விசேஷ விதிகள் அடங்கிய சட்டம் ஒன்று 1947ல் இயற்றப்பட்டது. அது ஒரு தாற்காலிகச் சட்டமாக இருந்தது. இத்திருத்தச் சட்டத்தால் அச்சட்டம் ஒரு நிரந்தரச் சட்டமாகச் செய்யப்பட்டுள்ளது. ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தரிடம், அவருடைய சம்பளத்தால் ஏற்படக்கூடிய செல்வ நிலைக்கு மிக அதிகமான ஐவேஜுகள் அவரிடமோ அவருக்காக வேறு ஒருவரிடமோ காணப்பட்டால் அவர் வழக்கமாக லஞ்சம் வாங்குபவராக பாவிக்கப்பட்டு, இச்சட்டப்படி கடும் தண்டனை அடைவார். அளவுக்கு மிஞ்சிய ஐவேஜுகள் தம்மிடம் எப்படி வந்தனென்று அவ்வதிகாரி ருசுப்பித்தாலொழிய இச்சட்டத்திலிருந்து தப்பமுடியாது.

### 9. ரயில்வேச் செலவு அனுமதிச் சட்டம்

### 10. கடல் சுங்கவரிச் சட்டத் திருத்தம்

(2-4-1957) தீர்வை கட்டாமல் அயல் நாடுகளிலிருந்து திருட்டுத் தனமாக சரக்குகளை கப்பல்களில் ஒளித்து வைத்து இந்தியாவுக்குள் புகுத்துவதைத் தடை செய்யச் சில புதிய ஷரத்துக்கள் 1878-ம் வருடத்திய கடல் சுங்கச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. சரக்குகளை ஒளித்து வைக்க வசதிகளுடன் கட்டப்பட்ட கப்பல்களையே இந்தியத் துறைமுகங்களிலோ, இந்தியாவிலிருந்து 12 மைல் தூரத்திற்குள்ளோ விட மறுக்கவும் இந்தியச் சுங்க அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட எல்லைக்குள் வரும் எந்தக் கப்பல்களையும் இந்திய அதிகாரிகள் நிறுத்தி, உட்புகுந்து சோதனை செய்யலாமென்றும்; இந்திய அதிகாரிகள் உத்தரவு செய்தும் நிறுத்தாத கப்பல்களை நமது சர்க்கார் கப்பல்கள் துரத்திப் பிடிக்கவும், தேவையானால் அவைகளைச் சுடவும் இந்திய அதிகாரிகளுக்கு இத்திருத்தச் சட்டத்தால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

### 11. அயல்நாட்டினர் சட்டத் திருத்தம்

(2-4-1957) இந்தியப் பிரஜைகள் அல்லாத அயல் நாட்டினரைப்பற்றிய 1946-ம் வருடச் சட்ட ஷரத்துக்கள் திருத்தப்பட்டிருக்கின்றன. 'காமென்வெல்த்'தைச் சேர்ந்த குறிப்பிட்ட நாட்டின் பிரஜைகளுக்கும் குறிப்பிட்ட வேறு தனி நபர்களுக்கும் இச்சட்ட ஷரத்துக்களிலிருந்து விதிவிலக்களிக்க மத்தியச் சர்க்காருக்கு அதிகாரமளிக்கும் ஒரு ஷரத்து இச்சட்டத்தால, தாய்ச் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

### 12. தாற்காலிக வரி வசூல் சட்டத் திருத்தம்

(27-5-1957) கஸ்டம்ஸ். எக்சைஸ் சுங்க வரிகளைப் புதிதாக விதிக்கவோ, உயர்த்தவோ

மத்திய சர்க்காரால் மசோதாக்கள் கொண்டு வரப்படும்போது, அவ்வரிகள் உடனடியாக விதிக்கப்படவேண்டுமென்று மத்திய சர்க்கார் அபிப்பிராயப்பட்டால், அம்மசோதாக்கள் என்று தினம் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படுகின்றனவோ, அதற்கு அடுத்த நாள் முதல் அவை அமுலுக்கு வந்துவிட்டதாக பாவித்து அவற்றின்படி தீர்வை அல்லது வரி விதிக்க மத்திய சர்க்காருக்கு ஒரு தாற்காலிக அதிகாரமளிக்கும் 1931-ம் வருடத்திய மத்தியச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. அச்சட்டப்படி இந்த தாற்காலிக வரிவசூல் அதிகாரமானது 60 நாட்களுக்குத்தான் உண்டு. இந்த வருடம் அதாவது 15-5-1957க்குப் பின் 31-12-1957க்குள் மத்திய சர்க்கார் கொண்டு வரும் மசோதாக்களில் கண்ட மேற்கண்ட வரிகளை 120 நாட்கள் வரை வசூல் செய்ய மத்தியச் சர்க்காருக்கு அதிகாரம் கொடுத்து 1931-ம் வருடத்திய சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் கொண்டு வந்திருக்கும் மசோதாக்கள் அதற்கு முன்பாகவே பார்லிமெண்டால் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாகி விட்டாலும், இத்தாற்காலிக அதிகாரம் போய்விடும்.

## 13. அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத் திருத்தம்

(4-6-1957) சில அத்தியாவசியப் பண்டங்களின் உற்பத்தி, விநியோகம், சேமிப்பு, விலை முதலியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான 1955-ம் வருடத்திய 10-வது மத்தியச் சட்டத்தில் செக்ஷன் 3A என்ற ஒரு புதிய ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்புதிய ஷரத்தின்படி உணவு தானியம் முதலிய அத்தியாவசியப் பண்டங்களைப் பதுக்கி வைத்திருப்பவர்களிடமிருந்து அவற்றை சர்க்கார் எடுத்துக்கொண்டு, அதற்குமுன் மூன்று மாதங்களில் அவை விற்ற சராசரி விலையேதான் நஷ்டஈடாகக் கொடுக்கப்படுமென்று ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. விலை உயர்வைத் தடுக்கவே இந்த ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது.

## 14. 'காபிரைட்' அல்லது பிரசுர உரிமைச் சட்டம்

(4-6-1957) இலக்கியம், நாடகம், சங்கீதம், சித்திரம் சிற்பம்போன்ற கலை வேலைகள், சினிமாபில்ம், ரிகார்டுகள் முதலியவற்றை பிரசுரம், மொழி பெயர்ப்பு முதலியவற்றைச் செய்ய யாருக்கு எவ்வளவு கால அளவுக்கு உரிமை இருக்கிறதென்று நிர்ணயம் செய்து அவ்வுரிமை பாதிக்கப்பட்டால் அதற்கான பரிகாரங்களையும் தண்டனைகளையும் வகுக்கும் சட்டம். இது சம்பந்தமான 1914-ம் வருடத்தியச் சட்டம் ரத்து செய்யப்பட்டு அதற்கு பதிலாக இச்சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இச்சட்டம் மத்திய சர்க்காரால் குறிப்பிடப்படும் தேதி முதல் அமுலுக்கு வரும். இம்முக்கியச் சட்டத்தின் விவரமான ஷரத்துக்கள் பிறகு "வக்கீலி"ல் விளக்கப்படும்.

## 15. அரசாங்கச் செலவு (3-வது) அனுமதிச் சட்டம

## 16. மத்திய விற்பனை வரிச் சட்டத் திருத்தம்

(4-7-1957) 1956-ம் வருடத்திய 74-வது மத்தியச் சட்டமாகிய மத்திய விற்பனை வரிச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. செக்ஷன் 8ல் மத்திய விற்பனை வரியிலிருந்து சில சரக்குகளுக்கு விதிவிலக்களிக்க மத்தியச் சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. இத்திருத்தச் சட்டத்தால் அவ்வதிகாரம் அந்தந்த ராஜ்ய சர்க்கார்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த ராஜ்யத்தில் உள்ள வியாபார ஸ்தலங்களிலிருந்து வெளி ராஜ்யங்களுக்கு விற்பனை செய்யும் வியாபாரியானவர் எந்தெந்த சரக்குகளுக்கு மத்திய விற்பனை வரி கொடுக்கவேண்டியதில்லை என்றோ, அல்லது குறைவான வரி கொடுத்தால் போதுமென்றோ விதிவிலக்களிக்க இனி ராஜ்ய சர்க்கார்களுக்கே அதிகாரம் இருக்கிறது. ராஜ்யங்களிடையே நடக்கும் வர்த்தகத்தில் விசேஷ முக்கியத்வம் வாய்ந்த சரக்குகள் எவை என்று செக்ஷன் 14ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவற்றுடன் "பருத்தி நூல்" ஒரு விசேஷ முக்கியத்துவம் வாய்ந்த சரக்காக இத்திருத்தச் சட்டத்தால் சேர்க்கப்பட்டிருக்கிறது. அவ்வித சரக்குகளுக்கு ராஜ்ய சர்க்கார்கள் விதிக்கக்கூடிய விற்பனை வரியைக் கட்டுப்படுத்தும் செக்ஷன் 15 திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது அவ்வித சரக்குகளுக்கு ராஜ்ய விற்பனை வரியானது 2 சத விகிதத்திற்கு அதிகப்படக்கூடாதென்றும், அவ்வரியும் அந்த ராஜ்யத்தில் ஏற்படும் கடைசி விற்பனை கட்டத்தில்தான் விதிக்கப்படவேண்டுமென்றும் செக்ஷன் 15 திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் அக்கடைசி விற்பனையானது வெளி ராஜ்ய

வியாபாரத்திற்காக வாங்கப்பட்டால் அதற்கு ராஜ்ய விற்பனை வரியே விதிக்கக்கூடாதென்றும் ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. ராஜ்யத்தில் ஏற்படும் கடைசி விற்பனை எது என்றும் விளக்கப்பட்டிருக்கிறது. விற்பனை வரிச் சட்டப்படி பதிவு செய்துகொண்ட வியாபாரியானவர் ஒரு பதிவுசெய்து கொள்ளாத வியாபாரிக்கோ அல்லது அச்சரக்கை சொந்த உபயோகத்திற்காக வாங்குபவருக்கோ விற்பதுதான் "கடைசி விற்பனை"யாகும். அல்லது சரக்கை வாங்கும் வியாபாரியும் பதிவு செய்துகொண்ட வியாபாரியாக இருந்தால் அவர் இச்சரக்கை தாம் விற்பனை செய்யும் வேறு சரக்குகளை உற்பத்தி செய்வதில் உபயோகிக்கவோ, அல்லது காண்டிராக்ட் வேலைகளில் உபயோகிக்கவோ வாங்கினாலும் அதுவும் "கடைசி விற்பனை" ஆகும். (மத்திய விற்பனை வரிச் சட்டம் "வக்கீல்" 1957 இதழ் (2)ல் விளக்கப்பட்டிருக்கிறது.)

## 17. ஆயுள் இன்ஷியூரன்ஸ் கார்பொரேஷன் சட்டத் திருத்தம்

(6-6-1957) சர்க்காரால் எடுத்து நடத்தப்படும் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளில் வேலை பார்த்து வந்தவர்களுடைய சம்பளம், படி முதலியவற்றை ஒழுங்குபடுத்த மத்தியச் சர்க்காருக்கு அதிகாரமளிக்கும் ஷரத்துக்கள் 1956-ம் வருடத்திய ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்பொரேஷன் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

## 18. தொழில் தகராறு சட்டத் திருத்தம்

(6-6-1957) 1947-ம் வருடத்திய தொழில் தகராறுச் சட்டத்தில் புதிதாக 25FF என்ற ஒரு செக்ஷனும் 25FFF என்ற ஒரு செக்ஷனும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தொழில் ஸ்தாபனங்களின் உரிமை வேறு ஒரு புது நபருக்கு மாற்றப்பட்டபோதிலும், புதிய உரிமையாளர் அந்த ஸ்தாபனத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களை அப்படியே தொடர்ந்து முன் இருந்த வேலை நிபந்தனைகளின்படியே வைத்துக்கொள்ளாவிட்டால், அத்தொழிலாளர்களுக்கு செக்ஷன் 25F ஷரத்தில் கண்டபடி நோட்டீசும் நஷ்ட ஈடும் கொடுக்கப்பட வேண்டுமென்றும்; ஒரு தொழில் ஸ்தாபனம் எக்காரணத்தைக் கொண்டு மூடப்பட்டபோதிலும் அதில் ஒரு வருடத்திற்குக் குறையாமல் வேலை செய்துவந்த தொழிலாளர்களுக்கு செக்ஷன் 25F ஷரத்தில் கண்டபடி நோட்டீசும் நஷ்டஈடும் கொடுக்கப்பட வேண்டுமென்றும் இரண்டு புதிய செக்ஷன்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நஷ்டம் ஏற்பட்டதாலோ அல்லது சரக்கு முடங்கிக் கிடக்கும் காரணத்தினாலோ அந்த ஸ்தாபனம் மூடப்பட்டாலும், தொழிலாளர்களுக்கு மேற்கண்டபடி நோட்டீசும் நஷ்டஈடும் உண்டு. இவை தவிர உரிமையாளரால் தடுக்க முடியாத வேறு காரணங்களினால் ஸ்தாபனம் மூடப்பட்டால் மட்டில் தொழிலாளர்களுக்கு மேற்கண்ட நஷ்ட ஈடு கிடைக்காது. கட்டடங்கள், பாலங்கள், ரஸ்தாக்கள், வாய்க்கால்கள், அணைகள் முதலிய கட்டட வேலைக்காக ஏற்படுத்தப்படும் ஸ்தாபனங்கள் இரண்டு வருடங்களுக்குள் வேலை பூர்த்தியான காரணத்தினால் மூடப்பட்டுவிட்டாலும், அதில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு யாதொரு நஷ்டஈடும் கிடைக்கத் தக்கதில்லை, ஆனால் இரண்டு வருடங்களுக்குள் வேலை முடியாத ஸ்தாபனங்கள் மூடப்படும்போது அதிலிருக்கும் தொழிலாளர்களுக்கு செக்ஷன் 25F படி நஷ்டஈடு கொடுக்கப்பட வேண்டும்.

## 19. ரிசர்வு பாங்கி சட்டத் திருத்தம்

(8-6-1957)

## 20. நிலக்கரி இருக்கும் பிரதேசங்களை ஆர்ஜிதம் செய்வதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான சட்டம்

(8-6-1957)

## 21. ஸ்டேட் பாங்கி சட்டத் திருத்தம்

(8-6-1957.)

# சென்னை தரிசு நிலச் சாகுபடி உத்தரவு (1957.)

1956-ம் வருடத்திய 10-வது மத்தியச் சட்டமாகிய அத்தியாவசியப்பண்டச் சட்டத்தின் செக்ஷன் 3 (1)ல் கண்ட அதிகாரத்தை உபயோகித்து மத்திய சர்க்காரின் அங்கீகாரத்துடன் சென்னை சர்க்காரால் இவ்வுத்தரவு பிரப்பிக்கப் பட்டிருக்கிறது. இவ்வுத்தரவு 14-8-1957 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 146—147 ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது இவ்வுத்தரவின் முக்கிய அம்சங்களாவன:— இவ்வுத்தரவு சென்னை ராஜ்யம் பூராவிலும் அமுலில் இருக்கும்.

## தரிசு நிலங்களைச் சாகுபடி செய்யும்படி கலெக்டர் நோட்டீசு மூலம் உத்தரவிடலாம்.

இவ்வுத்தரவின் 3-வது விதியின்படி, சாகுபடி செய்யப்படாமல் தரிசாக இருக்கும் நிலத்தில் "உணவுப்பயிர்" சாகுபடி செய்யும்படி ஜில்லா கலெக்டரோ அவருக்குட்பட்ட ரிவின்யூ டிவிஷனல் ஆபீசரோ நோட்டீசு பிறப்பிக்கலாம், நோட்டீசானது நிலத்தின் சொந்தக்காரருக்குக் கொடுக்கப்படும். ஆனல் அந்நிலமானது ஒரு குத்தகைதார் அல்லது சாகுபடிதாரின் சுவாதீனத்திலிருந்தால், நிலக்காரர், சாகுபடி அல்லது குத்தகைதார் இருவருக்கும் மேற்கண்ட நோட்டீசு கொடுக்கப்படும். முந்திய வருடத்தில் பொது உபயோகத்திற்காக ஒதுக்கப் பட்டிருக்கும் நிலங்கள் சம்பந்தமாக இவ்வித நோட்டீசு கொடுக்கப்பட மாட்டாது. நோட்டீசு தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள்ளோ, நோட்டீசில் கண்டிருக்கும் கெடுவுக்குள்ளோ, நேரிலோ, குத்தகைதார் மூலமாகவோ அந்நிலத்தில் உணவுப்பயிர் சாகுபடி செய்வது நிலக்காரர் அல்லது சாகுபடி தாரின் கடமையாகும். நோட்டீஸ்கிடைத்த இரண்டு வாரங்களுக்குள் நிலக்காரரோ குத்தகை அல்லது சாகுபடிதாரோ, அந்நிலமானது சாகுபடி செய்யலாயக்கற்றதென்றோ அல்லது சாகுபடி செய்யப்பட்டு வருகிற தென்றோ ருசுப்பித்தால் கலெக்டரின் நோட்டீசு ரத்து செய்யப்படும். அந்நிலத்தை குத்தகைக்கு விட்டிருப்பதை ருசுப்பித்தாலும் நிலக்காரர் சம்பந்தப் பட்டவரையில் நோட்டீசு ரத்து செய்யப்படும். "உணவுப்பயிர்" —என்றால் நெல், பலவகை நவதானியங்கள், பயறு, உளுந்து, துவரை காய்கறி மரவெள்ளி, சர்க்கரைவெள்ளி கிழங்கு இவைகளும் அடங்கியதே.

## சாகுபடி செய்யாவிட்டால்.

நோட்டீசில் கண்ட மூன்று மாதத்திற்குள்ளோ அல்லது நோட்டீசில் கண்ட வேறு கெடுவுகளுள்ளோ நிலக்காரரோ சாகுபடிதார் அல்லது குத்தகை தாராரோ, நோட்டீசில் கண்ட நிலங்களில் உணவுப்பயிர் சாகுபடி செய்யா விட்டால், அந்நிலத்தைச் சாகுபடி செய்யும் உரிமையைக்கலெக்டர் பகிரங்க ஏலத்தில் விட்டு விடலாம். சாதாரணமாக இவ்வித ஏலத்தில் விடப்படும் சாகுபடி 5 வருடங்களுக்கு இருக்கும். அக்கெடுவானது ஜூன் 30-ம் தேதியோ, அந்த ஜில்லாவின் மாமூல் படி விவசாய வருடம் முடியும் வேறு தேதியிலோ முடியும்படி ஏலம் விடப்படும். ஏலத்தில் கிடைக்கும் தொகையிலிருந்து சர்க்கார் கிஸ்தி முதலியவை போக பாக்கித்தொகை நோட்டீசுப்படி சாகுபடி செய்யத்தவரிய நிலக்காரருக்கோ அல்லது அவருடைய குத்தகை அல்லது சாகுபடிதாருக்கோ நஷ்ட ஈடாகக் கொடுக்கப்படும்.

சாகுபடி உரிமையை மேலே கண்டபடி ஏலத்தில் எடுத்தவரும் அந்நிலத்தில் உணவுப் பயிர் சாகுபடி செய்யவேண்டும். இவர் அப்படி செய்யத்தவரினல் கெடுவுக்கு முன்பே அவருடைய உரிமை ரத்து செய்யப்படும் அதனாலுண்டாகும் நஷ்டங்களுக்கும் அவர் பொருப்பாளியாவார்.

ஏலத்தில் கெடு முடிந்த பிறகு ஏலதார் நிலத்தை சிவாதீனத்தில் வைத்திருக்க உரிமை இல்லை. கெடுவுக்குப்பிறகும் அவர் நிலத்தை சுவாதீனம் வைத்துக் கொண்டிருந்தால், அவரை சுருக்கு முறையில் அப்புறபடுத்த கலெக்டருக்கு அதிகாரமுண்டு.

கலெக்டருடைய உத்தரவுகளைப் பரிசீலனை செய்யவும் கட்டுப்படுத்தவும் ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

# இந்து சுவீகார ஜீவனுர்சச் சட்டம் (1956)

[The Hindu Adoptions and Maintenance Act 1956. இச்சட்டம் இந்திய பார்லிமெண்டால் இயற்றப்பட்ட 1956-ம் வருடத்திய 78-வது மத்தியச் சட்டம். இச்சட்டத்திற்கு 21-12-1956ல் ஜனதிபதி அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்டு **22-12-1955** தேதியுள்ள இந்திய சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செயயப்பட்டுள்ளது. "சுவீகாரம்", "ஜீவனும்சம்" இரண்டும் தனித்தனி விஷயங்களாக இருந்தாலும் இவ்விரண்டு விஷயங்களேப்பற்றிய ஷரத்துக்களும் ஒரே சட்டத்தில் இருப்பதால் இச்சட்டத்திற்கு "இந்து சுவீகாரம் ஜீவனும்சம் பற்றிய சட்டம்" என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. கீழே இருப்பது இச்சட்டத்தின் வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்ப்பு அல்ல. "சுவீகாரம்" பற்றிய இச்சட்டத்தின் செக்ஷன் 1 முதல் **17** முடிய உள்ள செக்ஷன்கள் முன் இதழ்களில் விளக்கப்பட்டன. "ஜீவனும்சம்" பற்றிய ஷரத்துக்கள் கீழே விளக்கப்பட்டிருக்கின்றன.]

## அத்தியாயம் III

## ஜீவனும்சம்

### மனேவியைச் சம்ரக்ஷணே செய்ய வேண்டியது கணவனுடைய கடமையாகும்

செக்ஷன் 18

(1) இந்த செக்ஷனில் கண்டிருக்கும் ஷரத்துக்களுக்குட்பட்டு, ஒரு இந்து மனேவியின் திருமணம் இச்சட்டம் வருவதற்கு முன் நடந்திருந்தாலும் சரி, இச்சட்டம் வந்த பிறகு நடந்திருந்தாலும் சரி, அவளுடைய ஆயுட்காலம் வரை அவள் தன்னுடைய கணவனல் சம்ரட்சிக்கப்பட வேண்டியவளாவாள்

### சில சந்தர்பங்களில் மனேவியானவள் கணவனுடன் வசிக்காமல் தனியே வசித்து வந்தாலும் ஜீவனுப்ச உரிமை போய்விடாது

(2) கீழேகண்ட சந்தர்ப்பங்களில், மனேவியானவள் கணவனே விட்டுப் பிரிந்து தனியே வசித்து வந்தாலும் அவளுக்குக் கணவனிடமிருந்து ஜீவனும்சம் அடையும் உரிமை போய்விடாது. அச்சந்தர்ப்பங்களாவன:—

(a) நியாயமான காரணமில்லாமலும் மனேவியின் சம்மதம் இல்லாமலும் அல்லது மனேவியின் விருப்பத்திற்கு முரணுகவும் கணவனுனவர் மனேவியைக் கைவிட்டு விட்டாலும் (desertion) சரி அல்லது வேண்டுமென்ற மனேவியைக் கணவன் அனுதரவு (wilful neglect) செய்தாலும் சரி; (b) கணவனுடன் சேர்ந்து வசிப்பதால தனக்குத் தீங்கு அல்லது கெடுதி ஏற்படக் கூடுமென்ற மனேவியின் மனதில் ஒரு நியாயமான பயம் ஏற்படும் விதம் கணவன் தன் மனேவியிடம் குரூரமாக (Cruelty) நடந்துகொண்டிருந்தாலும் சரி; (c) கணவன் கடுமையான குஷ்ட ரோகத்தால் பீடிக்கப்பட்டிருந்தாலும் சரி; (d) கணவனுக்கு வேறு ஒரு மனேவி உயிருடன் இருந்தாலும் சரி; (e) எந்த வீட்டில் மனேவியுடன் வசித்து வருகிருரோ அதே வீட்டில் கணவன் ஒரு வைப்பு ஸ்திரீயை வைத்திருந்தாலும் சரி; அல்லது கணவனுனவர் வேறு இடத்தில் ஒரு வைப்பு ஸ்திரீயுடன் வழக்கமாக வசித்து வந்தாலும் சரி; (f) வேறு மதத்தைத் தழுவுவதால் கணவன் இந்துமதத்தை விட்டுவிட்டாலும் சரி (g) தனியே வசித்துவர வேறு நியாயமான காரணங்கள் இருந்தாலும் சரி; மேற்கண்டச் சந்தாப்பங்களில் மனேவியானவள் தன்னுடைய கணவனுடன் வசிக்காமல் தனியே வசித்து வந்தாலும், கணவனல் சம்ரட்சிக்கப்பட

வேண்டிய உரிமையை மனைவி இழக்க மாட்டாள்.

### கற்பிழந்த மனைவிக்கும் இந்து மதத்தை விட்டுவிட்ட மனைவிக்கும் ஜீவனும்ச உரிமை இல்லை

(3) மனைவியானவள் தவறான நடத்தை உள்ளவளாக இருந்தாலும் (unchaste) சரி, அல்லது வேறு மதத்தைத் தழுவுவதால் இந்துமதத்தை விட்டுவிட்டாலும் சரி; அவள் தனியே வசித்து வரவும் கணவனிடமிருந்த ஜீவனும்சம் வாங்கி வரவும் உரிமை அற்றவளாவாள்.

### சில சந்தர்ப்பங்களில் விதவை மருமகளை சம்ரட்சிக்கவேண்டியது மாமனாரின் கடமையாகும்

செக்ஷன் 19

(1) ஒரு இந்து ஸ்திரீககு இச்சட்டம் வருவதற்கு முன்பு திருமணமாகி இருந்தாலும் சரி, இச்சட்டம் வந்த பிறகு திருமணமாகி இருந்தாலும் சரி, அவளுடைய கணவன் இறந்த பிறகு கீழ்கண்ட சந்தர்ப்பங்களில் அவளை சம்ரட்சணை செய்யவேண்டியது அவளுடைய மாமனாருடைய (கணவனுடைய தகப்பனுடைய) கடமையாகும். அதாவது அவள் தன்னுடைய சுய சம்பாத்தியத்தைக் கொண்டோ அல்லது தன்னுடைய சொந்த சொத்தைக் கொண்டோ ஜீவனம் செய்ய முடியாவிட்டாலும் சரி; அல்லது அவளுக்குச் சொந்தச் சொத்து ஒன்றுமில்லாவிட்டால், அவளுடைய கணவனுடைய சொத்திலிருந்தோ அல்லது அவளுடைய தகப்பன் அல்லது தாய் இவர்களுடைய சொத்திலிருந்தோ; அல்லது தன்னுடைய மகன் அல்லது மகள் இவர்களாலோ அல்லது இவர்களுடைய சொத்திலிருந்தோ அவள் ஜீவனம் செய்ய முடியாமல் இருந்தாலும் சரி; இச்சந்தர்ப்பங்களில்தான் அவளை சம்ரட்சணை செய்ய அவளுடைய கணவனின் தகப்பன் கடமைப்பட்டவராவார். மேற்கண்ட வகைகளிலிருந்து எந்த அளவுக்கு அவ்விதவையானவள் ஜீவனம் செய்ய முடியவில்லையோ, அந்த அளவுக்குத்தான் அவளை சம்ரட்சிக்கவேண்டியது அவளுடைய மாமனாரின் கடமையாகும்.

(2) மருமகளுக்குப் பங்கு வீதம் கொடுக்கப்படாத பிரிபடாத குடும்பச் சொத்துக்கள் மாமனாரிடம் ஒன்றுமில்லாவிட்டாலும் சரி; மருமகள் வேறு மணம் செய்துகொண்டு விட்டாலும் சரி; அவளைச் சம்ரட்சணை செய்யவேண்டிய கடமை மாமனாருக்குக் கிடையாது.

### சொந்தக் குழந்தைகளையும் வைப்புக் குழந்தைகளையும் வயதான பெற்றோர்களையும் சம்ரட்சிக்க வேண்டியது இந்துவின் கடமையாகும்

செக்ஷன் 20

(1) இந்த செக்ஷனின் ஷரத்துக்களுக்குட்பட்டு, ஒரு இந்துவானவர் (ஆணாக இருந்தாலும் சரி ஸ்திரீயாக இருந்தாலும் சரி) தன் ஆயுட்காலம் வரை, தன்னுடைய குழந்தைகளையும், தன்னுடைய வயது வந்த அல்லது நோய் வாய்ப்பட்ட பெற்றோர்களையும் சம்ரட்சிக்கக் கடமைப்பட்டவராவார். திருமணமான தம்பதிகளுக்குப் பிறந்த குழந்தைகளாக இருந்தாலும் சரி; (Legitimate children) திருமணமாகாதவர்களுக்குப் பிறந்த குழந்தைகளாக இருந்தாலும் சரி; (illegitimate children) அக்குழந்தைகளை சம்ரட்சிக்க வேண்டிய கடமை மேற்கண்டபடி தாய்க்கும் உண்டு; தகப்பனுக்கும் உண்டு.

(2) ஆனால் அக்குழந்தை மைனராக இருக்கும் வரையில்தான் (அதாவது 18 வயது பூர்த்தியாகாமல் இருக்கும் வரையிதான்) அக்குழந்தையைச் சம்ரட்சணை செய்யவேண்டியது தகப்பன் அல்லது தாயின் கடமையாகும்.

(3) வயது வந்த அல்லது நோய்வாய்ப்பட்ட பெற்றோர்களும் சரி, திருமணமாகாத மகளும் சரி தங்களுடைய சுய சம்பாத்தியத்தைக் கொண்டோ, வேறு சொத்துக்களைக் கொண்டோ ஜீவனம் செய்ய முடியாவிட்டால்தான் அவர்களை

சம்ரட்சணை செய்யவேண்டியது இந்துவின் கடமையாகும்.

விவரணம்:- இந்த செக்ஷனில் "பெற்றோர்கள்" என்று சொல்லப்படுவதில் குழந்தையில்லாத மாற்றாந்தாயும் (Childless Step-mother) சேர்ந்தவளாகும்.

## "ஜீவனத்திற்கு" அண்டியிருப்பவர்கள்" (Dependants) என்பது யார் யாரைக் குறிக்கும்

[இறந்த இந்துவின் சொத்துக்களை அடையும் வார்சுகள் இறந்தவரை "அண்டியிருந்தவர்"களை (Dependants) சம்ரட்சிக்க வேண்டுமென்று கீழே செக்ஷன் 22ல் சொல்லப்பட்டிருக்கிறது. "அண்டியிருப்பவர்கள்" என்பது எந்த எந்த உறவினர்கள் என்பது இந்த செக்ஷனில் விளக்கப்பட்டிருக்கிறது.]

ஜீவனும்சம் சம்பந்தமான இந்த அத்தியாயம் சம்பந்தப்பட்ட வரையில், இறந்து போன வரை "அண்டியிருந்தவர்கள்" (Dependants) என்பது அவருடைய அடியில்கண்ட உறவினர்களைக் குறிக்கும். அவர்களாவன:—

செக்ஷன் 21

(1) இறந்தவருடைய தகப்பன்.

(2) இறந்தவருடைய தாய்.

(3) இறந்தவருடைய மனைவி (அவள் மருமணம் செய்துகொள்ளாமல் இருக்கும் வரை.)

(4) இறந்தவருடைய மகன்; இறந்தவருடைய மகன் அவருக்கு முன்பே இறந்திருந்தால் அம்மகனுடைய மகன்; இறந்தவருடைய மகனும் பேரனும் அவருக்கு முன்னதாகவே இறந்திருந்தால் அப்பேரனுடைய மகன்; (ஆனால் அவ்வித் பேரனோ பேரனின் மகனோ தன்னுடைய தகப்பன் அல்லது தாயின் சொத்துக்களிலிருந்து ஜீவனம் செய்ய முடியாதிருக்கவேண்டும்.)

(5) இறந்தவருடைய திருமணமாகாத பெண் மகள்; இறந்தவருடைய மகன் அவருக்கு முன்பே இறந்திருந்தால் அம்மகனுடைய திருமணமாகாத பெண் மகள்; இறந்தவருடைய மகனும்; பேரனும் அவருக்கு முன்னதாகவே இறந்திருந்தால் அப்பேரனுடைய திருமணமாகாத பெண் மகள் (ஆனால் அவ்வித பேத்தியோ, பேரனின் மகளோ, தன்னுடைய தகப்பன் அல்லது தாயின் சொத்திலிருந்து ஜீவனம் செய்யமுடியாமல் இருக்கவேண்டும்.)

(6) இறந்தவருடைய விதவையான பெண் மகள். (ஆனால் அவள் தன்னுடைய கணவனுடைய சொத்துக்களிலிருந்தோ, அல்லது அவளுடைய மகன் அலலது மகள் அல்லது அவர்களுடைய சொத்தககளிலிருந்தோ, அல்லது அவளுடைய மாமனார் அலலது அவருடைய தகப்பன் அல்லது அவர்களுடைய சொத்துக்களிலிருந்தோ ஜீவனம் செய்ய முடியாமல் இருக்கவேண்டும்.)

(7) இறந்தவருடைய மகனின் விதவை; இறந்தவருடைய மகனின் மகனின் விதவை. (இவர்கள் மருமணம் செய்து கொள்ளாமலிருக்கும் வரை.) மேலும் இவர்கள் தங்களுடைய கணவன் சொத்திலிருந்தோ அல்லது மகன் அல்லது மகள் அல்லது அவர்களுடைய சொத்திலிருந்தோ; பேரனின் விதவையாக இருந்தால் அவளுடைய மாமனாரின் சொத்திலிருந்தோ ஜீவனம் செய்ய முடியாமலிருக்கவேண்டும்.

(8) இறந்தவருடைய வைப்பு மகன் (illegitimate Son) — அம்மகன் மைனராக இருககும் வரை.

(9) இறந்தவருடைய வைப்பு மகள்—(Illegitimate daughter) — அவள் திருமணமாகாமல் இருக்கும் வரை. இந்து ஒருவர் இறந்துபோனால், மேலே கண்ட உறவினர்கள் தான் அவரை "அண்டியிருந்தவர்கள்" (Dependants) எனப்படுவார்கள்.

## இறந்த இந்துவை "அண்டிருந்தவர்"களை இறந்தவருடைய சொத்தை அடையும் வார்சுகள் சம்ரட்சிக்கவேண்டும்.—சொத்து அடையும் அளவுக்கு

செக்ஷன் 22 (1)

கீழே செக்ஷன் 22 (2)ல் கண்ட ஷரத்துக்குட்பட்டு, இறந்த இந்துவின் வார்சுகள், இறந்தவரிடமிருந்து தாங்கள் அடைந்த சொத்துக்களில் இருந்து, இறந்தவரை "அண்டியிருந்த" உறவினர்களை சம்ரட்சணை செய்யவேண்டும்.

## ஆனால் இறந்தவருடைய சொத்துக்களில் ஒரு பாகத்தை அடையாமல் இருப்பவர்களைத்தான் வார்சுகள் சம்ரட்சிக்க வேண்டியது

செக்ஷன் 22 (2)

இச்சட்டம் வந்த பிறகு இறந்துபோகும் இந்துவின் உயில் மூலமாகவோ, அல்லது அவருடைய வார்சு முறைமையிலோ அவரை ஜீவனத்திற்கு அண்டியிருக்கும் உறவினர் ஒருவர், இறந்தவருடைய சொத்துக்களில் ஒரு பாகத்தை அடையாதிருந்தால், அவரை சம்ரட்சணை செய்யவேண்டியது இறந்தவருடைய சொத்துக்களை அடையும் வார்சுகளின் கடமையாகும்.

## வார்சுகள் வீதாசாரமாக ஜீவனம்சம் கொடுக்கவேண்டும்

செச்ஷன் 22 (3)

இறந்தவருடைய சொத்துக்களை அடையும் ஒவ்வொரு வார்சும், தாம் எவ்வளவு சொத்து அடைந்திருக்கிறாரோ அதே வீதாசாரப்படி மேற்கண்டவர்களுக்கு ஜீவனம்சம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்

## ஜீவனம்சம் அடையவேண்டியவருக்கே சொத்துக் கிடைத்தால்

செக்ஷன் 22 (4)

மேலே செக்ஷன் 22 (2); செக்ஷன் 22 (3), இவற்றில் எவ்விதம் கண்டிருந்தபோதிலும், இறந்தவரை ஜீவனத்திற்கு "அண்டியிருந்த" ஒருவர் இறந்தவருடைய சொத்துக்களை அடைந்திருந்தால் அவர் மற்றவர்களுக்கு வீதாசாரமாக ஜீவனம்சம் கொடுக்க வேண்டிய கடமை அடியில் கண்ட சந்தர்ப்பத்தில் மறைந்து போய்விடும். அதாவது மேற்கண்டபடி சொத்தை அடைந்தவர் மற்றவர்களுக்கு ஜீவனம்சம் கொடுப்பதால், தாமே ஜீவனம்சம் வாங்குவதாக இருந்தால் அவருக்கு எவ்வளவு கிடைக்குமோ அந்த அளவுக்கும் குறைவாக தாம் அடைந்த சொத்துக்கள் குறைந்து விடுமானால் — அவர் மற்றவர்களுக்கு அச்சொத்திலிருந்து ஜீவனம்சம் கொடுக்கவேண்டிய கடமை இல்லை

18746

## ஜீவனம்சத் தொகை

செக்ஷன் 23 (1)

இச்சட்டத்தின்படி ஒருவருக்கு ஜீவனம்சம் அல்லது வாழ்க்கைச் செலவு கொடுக்கப்பட வேண்டுமா என்பதையும், அப்படியானால் எவ்வளவு தொகை கொடுக்கப்படவேண்டுமென்பதையும் கோர்ட்டாரே தீர்மானம் செய்யவேண்டும். அவ்விதம் தீர்மானம் செய்ய கீழே செக்ஷன் 23 (2); 23 (3) இந்த ஷரத்துக்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயங்களைக் கோர்ட்டார் கவனிக்கவேண்டும்

## மனைவி; குழந்தைகள், வயதுவந்த அல்லது நோய்வாய்ப்பட்ட பெற்றோர்கள் - இவர்களுக்கு ஜீவனம்சம் அளிப்பதில் கோர்ட்டால் கவனிக்கப்படவேண்டிய விஷயங்கள்

இச்சட்டப்படி ஒருவருடைய மனைவிக்கோ, குழந்தைகளுக்கோ, அல்லது

செக்ஷன் 23 (2) அவருடைய வயது வந்த அல்லது நோய் வாய்ப்பட்ட பெற்றோர்களுக்கோ ஜீவனாம்சம் அளிக்கப்படவேண்டியிருந்தால் கீழே கண்ட விஷயங்கள் கவனிக்கப்படவேண்டும். அவை யாவன:— (a) கக்ஷிக்காரர்களுடைய நிலைமையும் அந்தஸ்தும் (b) ஜீவனாம்சம் கேட்பவருக்கு நியாயமான தேவைகள் (c) ஜீவனாம்சம் கேட்பவர் தனியாக வசித்து வந்தால், அவர் அவ்விதம் வசித்துவர உரிமை உண்டா. (d) ஜீவனாம்சம் கேட்பவருடைய சொத்துக்களின் மதிப்பு; அச்சொத்தின் வருமானம்; அவருடைய சொந்தச் சம்பாத்தியம்; அவருக்கு வேறு வகைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் (e) இச்சட்டப்படி எத்தனை நபர்கள் ஜீவனாம்சம் அடைய உரிமை உள்ளவர்கள் — என்ற விஷயங்களைக் கோர்ட்டார் கவனிக்க வேண்டும்.

## அண்டியிருந்தவர்களுக்கு ஜீவனாம்சம் அளிப்பதில் கோர்ட்டார் கவனிக்கவேண்டிய விஷயங்கள்

செக்ஷன் 23 (3) இறந்த இந்துவை "அண்டியிருந்த" வர்களுக்கு இச்சட்டப்படி ஜீவனாம்சம் அளிக்கப்பட வேண்டியிருந்தால், கீழே கண்ட விஷயங்கள் கவனிக்கப்படவேண்டும் அவையாவன:—

a) இறந்தவர் கொடுக்கவேண்டிய கடன்கள் போகபாக்கியுள்ள அவருடைய சொத்துக்களின் நிகர மதிப்பு (b) இறந்தவர் ஜீவனாம்சம் அளிக்கப்படவேண்டிய நபருக்கு உயில் மூலம் ஏதாவது ஏற்பாடுகள் செய்திருக்கிறாரோ (c) இறந்தவருக்கும் ஜீவனாம்சம் அளிக்கப்படவேண்டியவருக்கும் உள்ள உறவுமுறை (d) ஜீவனாம்சம் அளிக்கப்படவேண்டியவருடைய நியாயமான தேவைகள் (e) இறந்தவரும் ஜீவனாம்சம் அளிக்கப்பட வேண்டியவரும் ஒருவருடன் ஒருவர் எவ்விதம் பழகிக்கொண்டிருந்தனர் (f) ஜீவனாம்சம் அளிக்கப்படவேண்டியவருடைய சொந்த சொத்தின் மதிப்பு; அச்சொத்துக்களின் வருமானம்; அவருடைய சுய சம்பாத்தியம்; இன்னும் வேறு வகைகளிலிருந்து வருமானம் (g) இச்சட்டப்படி ஜீவனாம்சம் அளிக்கப்படவேண்டிய நபர்களின் எண்ணிக்கை — இவ்விஷயங்களை கவனித்து ஜீவனாம்சத் தொகை நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

## இந்து மதத்தை விட்டவர்களுக்கு ஜீவனாம்சம் கிடையாது

செக்ஷன் 24. வேறு மதத்தைத் தழுவுவதால் இந்து மதத்தை விட்டு விட்ட எவருக்கும் இச்சட்டப்படி ஜீவனாம்சம் கேட்க உரிமை இல்லை.

## ஜீவனாம்சத் தொகையை மாற்ற இடமுண்டு

செக்ஷன் 25 இச்சட்டம் வருவதற்கு முன்போ அல்லது பிறகோ, ஜீவனாம்சத் தொகையானது ஒரு டிக்ரி மூலமாகவோ அல்லது ஒப்பந்த மூலமாகவோ நிர்ணயம் செய்யப்பட்டிருந்தாலும், பிறகு சூழ்நிலையில் முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டு அதனால் ஜீவனாம்சத் தொகையை மாற்றுவது நியாயமாக இருந்தால், ஜீவனாம்சத் தொகை மாற்றப்படலாம்.

## கடன்கள் போக பாக்கியில்தான் ஜீவனாம்சம்

செக்ஷன் 26 கீழே செக்ஷன் 27ல் கண்டிருக்கும் ஷரத்துக்குட்பட்டு, இறந்தவர் கொடுக்க வேண்டிய எவ்விதக் கடன்களுக்கும் போக பாக்கி சொத்தில் தான் அவரை அண்டியிருந்தவர்கள் தங்களுடைய ஜீவனாம்ச உரிமைகளை வற்புறுத்தலாம்.

### ஜீவனும்சத் தொகைக்கு சொத்துக்களின் பேரில் எப்பொழுது "சார்ஜ்" அல்லது ஜாமீன் பாத்தியம் ஏற்படும்

அண்டியிருந்தவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஜீவனும்சத் தொகைக்கு இறந்தவருடைய சொத்துக்களின் பேரில் எவ்வித ஜாமீன் ("சார்ஜ்" — Charge) பாத்தியமும் ஏற்படாது.

செக்ஷன் 27

ஆனால் இறந்தவர் எழுதிவைத்த உயில் மூலமாகவோ, அல்லது கோர்ட் டிக்ரி மூலமாகவோ, அல்லது வார்சும் ஜீவனும்சம் அடையவேண்டியவரும் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தின் மூலமாகவோ, வேறு விதமாகவோ இறந்தவருடைய சொத்தின் பேரிலோ அதன் ஒரு பாகத்தின் பேரிலோ 'சார்ஜ்' எனப்படும் ஜாமீன் பாத்தியம் ஏற்படுத்தப்படலாம்.

### இறந்தவருடைய சொத்துக்களை வாங்குபவர்கள் சில சந்தர்ப்பங்களில் ஜீவனும்சம் கொடுக்கும்படி ஏற்படும்

இறந்தவருடைய சொத்துக்களிலிருந்து அவரை அண்டியிருந்த ஒருவருக்கு ஜீவனும்சம் அடைய பாத்தியம் இருந்து, இறந்தவருடைய சொத்துக்களோ அவைகளின் ஒரு பாகமோ வேறு ஒருவருக்கு மாற்றப்பட்டால், ஜீவனும்ச பாத்தியம் இருப்பது தெரிந்து அச்சொத்துக்களை வாங்குபவர்கள் அல்லது அடைபவர்கள்மீது, அப்பாத்தியமானது வற்புறுத்தப்படலாம். அல்லது அச்சொத்துக்கள் யாதொரு பிரதிப் பிரயோஜனமுமில்லாமல் இனமாக வேறு ஒருவருக்கு மாற்றப்பட்டால், அச்சொத்துக்களை இனமாக அடைபவருக்கு ஜீவனும்ச பாத்தியம் இருப்பது தெரிந்திருந்தாலும் தெரியாமலிருந்தாலும் அவர் மீது அப்பாத்தியம் வற்புறுத்தப்படலாம். ஆனால் பிரதிப் பிரயோஜனம் கொடுத்தும், ஜீவனும்ச பாத்தியம் இருப்பது தெரியாமலும் சொத்துக்களை வாங்குபவர்கள்மீது ஜீவனும்ச பாத்தியத்தை வற்புறுத்த முடியாது.

செக்ஷன் 28

## அத்தியாயம் 4

### ரத்து

1946-ம் வருடத்திய (19-வது மத்தியச் சட்டமாகிய) திருமணமான இந்து ஸதிரீகள் தனியே வசித்து ஜீவனும்சம் கேட்க உரிமை யளிக்கும் சட்டமும் 1956-ம் வருடத்திய (30-வது மத்தியச் சட்டமாகிய) இந்து வார்சுரிமைச் சட்டத்தின் செக்ஷன் 30 (2) என்ற ஷரத்தும் இதன் மூலம் ரத்து செய்யப்பட்டுள்ளன.

செக்ஷன் 29

### இச்சட்டத்திற்கு முன் ஏற்பட்ட சுவீகாரங்கள்

இச்சட்டம் அமுலுக்கு வருவதற்குமுன் ஏற்பட்ட சுவீகாரங்களை இச்சட்ட ஷரத்துக்கள் பாதிக்க மாட்டா. அவ்வித சுவீகாரங்கள் செல்லுமா என்பதும் அவ்வித சுவீகாரங்களினால் ஏற்படும் மாறுதல்கள் அல்லது விளைவுகளும், இச்சட்டம் வராவிட்டால் எப்படியோ அவ்விதமே தீர்மானம் செய்யப்படவேண்டும்.

செக்ஷன் 30



# வழக்கும் தீர்ப்பும்

[இப்பகுதியில், சமீபத்தில், நமது சுப்ரீம் கோர்ட்டிலும் சென்னை ஹைகோர்ட் முதலிய உயர்நீதி மன்றங்களிலும் நடந்த வழக்குகளில் அளிக்கப்பட்ட சில தீர்ப்புகளை ஆதாரமாகக்கொண்டு சட்ட விளக்கம் செய்யப்படும்.]

## ஒரு எலெக்ட்ரிக் மோட்டார் வைக்க லைசென்சு கேட்டுப் பஞ்சாயத்துப் போர்டுக்கு மனுப்போட்டவர், லைசென்சு கொடுக்கப்படுமுன் மோட்டாரை ஓட்டினால் குற்றமாகுமா?

[ஆதாரம்:—சென்னை ஹைகோர்ட் 1956 வருடத்திய 301ம் நம்பர் கிரிமினல் அப்பீலில் உயர்நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் அளித்த தீர்ப்பு 70 லா வீக்லி 544.]

பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 92 என்ற ஷரத்தின்படி ஒரு தொழிற்சாலை அல்லது பட்டரைக்கு ஒரு மோட்டார் அல்லது வேறு விசை யந்திரங்கள் வைக்கவேண்டுமானால் பஞ்சாயத்திற்கு மனுப்போட்டு பஞ்சாயத்தின் அனுமதி அல்லது 'லைசென்சு' வாங்கிக்கொள்ள வேண்டும். இவ்விதம் ஒரு மோட்டார் அல்லது விசை யந்திரத்தை அமைக்க 'லைசென்சு' கேட்டு ஒருவர் மனுப்போட்டும், பஞ்சாயத்தானது அம்மனுவின் பேரில் லைசென்சு கொடுக்கப்பட்டதென்றோ, லைசென்சு மறுக்கப்பட்டதென்றோ எவ்வித உத்தரவும் போடாமல் காலதாமதம் செய்யாமல் இருக்க வேண்டியதற்காகப் பஞ்சாயத்துச் சட்டத்தில் வேறு ஒரு ஷரத்தும் இருக்கிறது.

அதாவது செக்ஷன் 96 (3) என்ற ஷரத்தின்படி — லைசென்சு வேண்டுமென்று போடப்படும் ஒரு மனுவின் பேரில் ஏற்படும் உத்தரவை மனுக் கிடைத்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் மனுதாருக்குத் தெரிவிக்காவிட்டால், லைசென்சு கொடுக்கப்பட்டு விட்டதாக பாவிக்கப்படும். இந்த 30 நாட்களுக்கு பதிலாக அதிக கெடுவைக் குறிப்பிட்டு விதிகள் செய்ய சர்க்காருக்கு அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தை உபயோகித்து சென்னை சர்க்காரும் இக்கெடுவை 60 நாட்கள் என்று மாற்றி இருக்கின்றனர். அதாவது பஞ்சாயத்துக்கு ஒருவர் லைசென்சு மனுப்போட்டு, 60 நாட்களுக்குள் அம்மனுவின் பேரில் ஏற்பட்ட உத்தரவு என்ன என்று மனுதாருக்குத் தெரிவிக்கப்படாவிட்டால், லைசென்சு கிடைத்ததாகவே பாவித்து மனுதார் வேலையைத் தொடங்கலாம்.

இந்த ஷரத்தை ஒட்டி பிரஸ்தாப வழக்கில் ஒரு பிரச்னை ஏற்பட்டது. அதாவது லைசென்சு கேட்கும் மனுத் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் லைசென்சு கொடுக்கப்பட்டதென்றோ, அல்லது மறுக்கப்பட்டதென்றோ உத்தரவு போடாமல் — "மனு கவனிக்கப்பட்டு வருகிறது. முடிவான உத்தரவு கிடைக்கும்வரை யந்திரத்தை அமைக்கவும் ஓட்டவும் கூடாது" — என்று மட்டில் ஒரு இடைக்கால உத்தரவு கிடைத்தால், மனுதார் 60 நாட்களுக்கு மேலும் காத்திருக்கவேண்டுமா? அல்லது லைசென்சு கொடுக்கப்பட்டதாக பாவித்து மோட்டார் அல்லது யந்திரத்தை அமைத்து ஓட்டலாமா? என்பதுதான் இவ்வழக்கில் ஏற்பட்ட பிரச்னை.

பிரஸ்தாப வழக்கில் கருப்பய்யா பிள்ளை என்பவர் ஒரு 'ஹார்ஸ்பவர்

மோட்டார் ஒன்று அமைத்து அதைக் கொண்டு 'நிப்' செய்யும் தொழில் நடத்த பஞ்சாயத்து போர்டுக்கு 14-3-1955ல் மனுச் செய்தார். அவருக்கு 21-4-1955ல் ஒரு உத்தரவு கிடைத்தது. அதாவது மனுதாரின் மனுவானது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதென்றும் முடிவான உத்தரவு கிடைக்கும் வரை மனுதார் மோட்டாரை அமைக்கவும் ஓட்டவும் கூடாதென்றும் அவ்வுத்தரவில் கண்டிருந்தது. ஆனால் மனுதார் 24-5-1955ல் லைசென்சில்லாமல் மோட்டார் அமைத்து வேலை செய்துகொண்டிருந்தார் என்றும் இது குற்றமென்றும் அவர்மீது பஞ்சாயத்தானது கிரிமினல் வழக்குத் தொடர்ந்தது. பின்பு 1955 ஜூலை மாதத்தில் பஞ்சாயத்தானது மனுதாருக்கு லைசென்சும் கொடுத்துவிட்டது. இருந்தாலும் லைசென்சு கொடுக்கப்படு முன் எலெக்ட்ரிக் மோட்டாரை அமைத்து ஓட்டிய குற்றத்திற்காக அவர் மீது கிரிமினல் வழக்கு நடத்தப்பட்டது. மனுத் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் முடிவான உத்தரவு ஏற்படாத காரணத்தினால் கருப்பய்யா பிள்ளை இவ்விதம் செய்தது குற்றமல்ல என்று முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் அபிப்பிராயப் பட்டு பஞ்சாயத்தின் கிரிமினல் வழக்கைத் தள்ளுபடி செய்தார். இத்தீர்ப்பு சரி அல்ல என்று சென்னை சர்க்கார் அத்தீர்ப்பின் பேரில் சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர். அப்பீலை விசாரித்த உயர்நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் இதுபோலவே முன்பு நடந்த இரண்டு வழக்குகளில் ஹைகோர்ட்டில் ஏற்பட்ட தீர்ப்புகளையும் ஆராய்ந்து, லைசென்சு கிடைக்குமுன் கருப்பய்யா பிள்ளை மோட்டாரை அமைத்து ஓட்டியது குற்றம்தான் என்றும், ஆனால் பிரஸ்தாப வழக்கில், பிற்பாடு லைசென்சு கொடுக்கப்பட்டு விட்டபடியால், மறுபடியும் கிரிமினல் வழக்கை மேல் நடத்தத் தேவை இல்லை என்றும் அபிப்பிராயப்பட்டு தீர்ப்பளித்திருக்கின்றனர். லைசென்சுக்கு மனுப்போட்ட 60 நாட்களுக்குள் பஞ்சாயத்தார் அனுப்பிய இடைக்கால உத்தரவானது பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 96(3) ஷரத்தின்படி போடப்பட்ட ஒரு உத்தரவாகுமென்றும், இதன்படி தாற்காலிகமாக லைசென்சு மறுக்கப்பட்டதாகவே ஏற்படுமென்றும் இதை மீறி மோட்டார் அமைக்கப்பட்டது ஒரு குற்றம்தான் என்றும் உயர்நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்

## சென்னை ரைஸ்மில் லைசென்சு உத்தரவு - மத்திய சர்க்காரின் திருத்தம் ராஜ்ய சர்க்காரின் ரிவிஷன் அதிகாரம்

[ஆதாரம்:— சென்னை ஹைகோர்ட் 1956ம் வருடத்திய 552 நெ. ரிட்மனுவின் பேரில் உயர்நீதிபதி ராஜகோபாலன் அவர்கள் அளித்த தீர்ப்பு 70 லா வீக்லி 547.]

ராமனாதபுரம் ஜில்லாவில் ஒரு கிராமத்தில் அப்துல் மஜீது என்பவர் இருபது வருடங்களாக ஒரு 'ரைஸ்மில' (நெல் அறைக்கும் மில்) வைத்து நடத்தி வருகிறார். 1955-ம் வருடத்திய "சென்னை ரைஸ்மில்லைசென்சு உத்தவின்" படி இவருக்கு ரைஸ்மில் நடத்த அனுமதி அல்லது "லைசென்சு" உண்டு. 1-8-1955ல் பாலகிருஷ்ண செட்டியார் என்பவர் அதே கிராமத்தில் ஒரு புதிய ரைஸ்மில் வைக்கத் தமக்கு லைசென்சு வேண்டுமென்று கேட்டு ஜில்லா கலெக்டருக்கு மனுச் செய்தார். இவர் ரைஸ்மில் வைக்க உத்தேசம் செய்த இடமானது ஏற்கனவே அப்துல் மஜீது நடத்திவந்த ரைஸ்மில்லுக்கு 40 அடிக்குள் அருகாமையிலேயே இருந்தது. ஆகையால் பாலகிருஷ்ண செட்டியாருக்கு லைசென்சு கொடுக்கக் கூடாதென்று அப்துல் மஜீது ஆட்சேபனை தாக்கல் செய்தார். 9-11-1955ல் பாலகிருஷ்ண செட்டியாரின் மனு கலெக்டரால் நிராகரிக்கப்பட்டது. அதாவது புதிய ரைஸ்மில் அமைக்கக் கலெக்டர் லைசென்சு கொடுக்க மறுத்து விட்டார். கலெக்டரின் உத்தரின் பேரில் பாலகிருஷ்ண

செட்டியார் சென்னை சர்க்காருக்கு 3-1-1956ல் அப்பீல் செய்தார். இந்த அப்பீலை சர்க்கார் 19-1-1956ல் சிவில் சப்ளைஸ் கமிஷனருக்கு அனுப்பினர். சிவில் சப்ளைஸ் கமிஷனரிடமும் அப்துல் மஜீது தம்முடைய ஆட்சேபணைகளைத் தெரிவித்தார். சிவில் சப்ளைஸ் கமிஷனர் தம்முடைய அப்பிராயத்தைச் சாககாருக்கு 'ரிபோர்ட்' மூலம் அனுப்பினர். இச்சந்தர்ப்பத்திலும் அப்துல்மஜீது தப்மூடைய ஆட்சேபணைகளைச் சர்க்காருக்கும் தெரிவித்தார். ஆனால் இவருடைய ஆட்சேபணைகளை நிராகரித்து பால கிருஷ்ண செட்டியாருக்கு லைசென்சு கொடுக்கும்படி சர்க்காரால் ஜில்லா கலெக்டருக்கு 23-4-1956ல் உத்தரவு அனுப்பப்பட்டது. கலெக்டர் பால கிருஷ்ண செட்டியாருக்கு 3.5-1956ல் லைசென்சு கொடுத்துவிட்டார்

பிறகு 7-5-1956ல் அப்துல்மஜீது சென்னை ஹைகோர்ட்டில் கலெகடர் மீதும் சென்னை சர்க்கார்மீதும் ஒரு 'ரிட்' மனு தாகல் செய்தார். அதாவது பால கிருஷ்ண செட்டியாருக்கு 'லைசென்சு' கொடுக்காமல் கலெக்டருக்குத் தடை (writ of prohibition) உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று ஹைகோர்டாரிடம் பிரார்த்தித்துக் கொண்டார். ஆனால் இவர் 'ரிட்' மனு போடுவதற்கு முன்பே பாலகிருஷ்ண செட்டியாருக்குக் கலெக்டர் 'லைசென்சு' கொடுத்து விட்டபடியால், இவ்விஷயம் தமக்கு 1956 டிசம்பர் மாதத்தில்தான் தெரிய வந்ததென்று சொலலி 'ரிட்' மனுவின் பிரார்த்தனையை அவர் திருத்திக் கொண்டார். அதாவது தடை உத்தரவு இனி பிரயோஜனமில்லையாகையால் 'ரத்து உத்தரவு' (Writ of certiorari) அதாவது கலெக்டர் சர்க்கார் இவர்களுடைய நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்து அவை செல்லாதென அவற்றை ரத்து செய்யும்படி தம்முடைய பிரார்த்தனையைத் திருத்திக் கொண்டார். ஏனென்றால் சென்னை சர்க்காரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியாகிய 23-4-1956 தேதியில் அமுலில் இருந்த சட்டப்படி, அதாவது அப்போது அமுலிலிருந்த சென்னை ரைஸ் மில் லைசென்சு உத்தரவின்படி கலெக்டருடைய உத்தரவை அப்பீலில் மாற்ற சென்னை சர்க்காருக்கே அதிகாரமில்லை அதிகாரம் இல்லாமல் சர்க்கார் செய்த உத்தரவு செல்லாதென்பதே அப்துல் மஜீதின் வாதம். இதை உயர்நீதிபதி அவர்கள் ஏற்றுக் கொண்டனர். அதாவது 23-4-1956ல் இவ்விதம் உத்தரவு செய்ய சர்க்காருக்கு அன்று தேதியில் சட்டப்படி அதிகாரமில்லை என்றும் சர்க்கார் செய்த உத்தரவு ரத்து செய்யப்பட வேண்டியதுதான் என்றும் உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். ஆனால் வேறு காரணங்களினால் பாலகிருஷ்ண செட்டியாருக்குக் கொடுக்கப்பட்ட லைசென்சை உயர் நீதிபதி அவர்கள் ரத்து செய்யவில்லை

ஏனென்றால் இதற்கு நடுவில் ரைஸ் மில் லைசென்சு உத்தரவு சம்பந்தமான சட்ட ஷரத்துக்கள் திருத்தி அமைக்கப்பட்டுவிட்டன. 1919-ம் வருடத்திய 29-வது சென்னைச் சட்டத்தில் கண்டிருக்கும் அதிகாரங்களை உபயோகித்து 1955-ம் வருடத்திய சென்னை ரைஸ்மில் லைசென்சு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அத்தியாவசிய பண்டங்கள் சம்பந்தமாக 1955ல் டில்லி பார்லிமெண்டால் ஒரு மத்தியச் சட்டம் இயற்றப்பட்டது. 1955-ம் வருடத்திய 10 வது மத்தியச் சட்டம். (Essential Commodities Act 1955.) இச்சட்டப்படி ராஜ்ய சர்க்கார்களால் பிறப்பிக்கப்பட்டிருக்கும் உத்தரவுகளை ரத்து செய்யவும் திருத்தி அமைக்கவும் மத்தியச் சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தை உபயோகித்து 31-5-1956ல் சென்னை ரைஸ் மில் லைசென் உத்தரவின் சில விதிகளை மத்தியச் சர்க்கார் திருத்தி அமைத்தனர். *இத்திருத்தின்படி ரூல் 11 A என்ற ஒரு புதிய விதி சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்புதிய விதியின்படி ஒரு

*சென்னை ரைஸ்மில்ஸ் லைசென்சிங் உத்தரவு (Madras Rice Mills Licening order-1955) 26-1-1955 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட்—பக்கம்5—9ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரால் செய்யப்பட்ட திருத்தங்கள் 11-7-1956 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 143ல் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

வருக்கு ரைஸ்மில் லைசென்சு கொடுக்கவோ, புதுப்பிக்கவோ லைசென்சு அதிகாரியாகிய ஜில்லா கலெக்டர் மறுத்து விட்டால், அவ்வுத்தரவின் பேரில் சென்னை சிவில் சப்ளைஸ் கமிஷனர் (Commissioner of Civil Supplies—Madras) என்ற அதிகாரிக்கு 2 மாதங்களுக்குள் அப்பீல் செய்யலாம். கலெக்டராலோ அல்லது விதி 6ன்படி அதிகாரம் பெற்ற வேறு அதிகாரிகளாலோ ஒருவருடைய லைசென்சு ரத்து செய்யப்பட்டாலும், சஸ்பெண்டு செய்யப்பட்டாலும், 2 மாதங்களுக்குள் சென்னை சிவில் சப்ளைஸ் கமிஷனருக்கு அப்பீல் செய்யலாம்.

மேலும் சிவில் சப்ளை ஸ்கமிஷனர் செய்யும் அப்பீல் உத்தரவுகளையும் லைசென்சை ரத்து செய்தோ சஸ்பெண்டு செய்தோ சிவில் சப்ளை ஸ்கமிஷனர் செய்யும் உத்தரவுகளையும் பரிசீலனை (Revise) செய்யவேண்டுமென்று 2 மாதங்களுக்குள் சென்னை ராஜ்ய சர்க்காருக்கு ரிவிஷன் மனு செய்துகொள்ளவும் இப்புதிய திருத்தத்தால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது

ஆகையால் இத்திருத்தம் ஏற்பட்ட 31-5-1956 தேதிக்குப் பிறகுதான் ராஜ்ய சர்க்காருக்கே பரிசீலனை அல்லது 'ரிவிஷன்' அதிகாரம் கொடுக்கப்பட்டது. அதற்குமுன்பே ராஜ்ய சர்க்காரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு செல்லாமல் போனாலும் பாலகிருஷ்ண செட்டியாருக்குக் கொடுக்கப்பட்ட லைசென்சை ரத்து செய்யவேண்டியதில்லை என்று உயர்நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்

ஏனென்றால் ரைஸ்மில் உத்தரவின் 2-வது விதியின்படி புதிதாக லைசென்சு கொடுக்கும் விஷயமாக யார் யாருக்கு லைசென்சு கொடுக்கலாம், யாருக்கு லைசென்சு மறுதளிக்கப்பட வேண்டுமென்று அவ்வப்பொழுது நிலைமைக்குத் தக்கபடி பொதுவாக கலெக்டர்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்க ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. இவ்வதிகாரத்தை உபயோகித்து 1956 ஜனவரி மாதத்தில் சென்னை சர்க்கார் ஒரு உத்தரவு பிறப்பித்தனர். இவ்வுத்தரவின்படி ரைஸ்மில் கட்டடங்கள் கட்டி பூர்த்திசெய்து யந்திரங்களும் அமைத்து விட்டவர்கள் அல்லது யந்திரங்களை வாங்கித் தயாராக வைத்திருப்பவர்கள் இவர்களுக்கு மட்டில் புதிய லைசென்சு கொடுக்கலாமென்று உத்தரவு செய்திருந்தனர். ஆகையால் இவ்வுத்தரவுக்குப் பிறகு 1956ல தாம் புதிதாக மனுப்போட்டிருந்தால் கலெக்டரே தமக்கு லைசென்சு கொடுக்கக் கடமைப்பட்டவர் என்றும், கலெக்டர் கடைசியாக லைசென்சு கொடுத்ததும் இப்பொது உத்தரவுக்குப் பிறகு தான் என்றும் ஆகையால் தமக்கு லைசென்சு கொடுக்கப்பட்டது சரி என்றும் பாலகிருஷ்ண செட்டியாருக்காக வாதாடப்பட்டது. மேலும் பாலகிருஷ்ண செட்டியாருடைய ரைஸ்மில் வேலை செய்ய ஆரம்பித்து நாளாகி விட்டது. பழைய லைசென்சு ரத்து செய்யப்பட்டாலும், புது லைசென்சு பெற பாலகிருஷ்ண செட்டியாருக்கு உரிமை இருக்கிறதென்று கருதி உயர்நீதிபதி அவர்கள் பாலகிருஷ்ண செட்டியாருக்கு அளிக்கப்பட்ட லைசென்சை ரத்து செய்யவில்லை. இவ்வழக்கில் 'ரிட்' மனு தாக்கல் செய்யவே அப்துல் மஜீதுக்கு உரிமை உண்டா என்ற சட்டப் பிரச்னையும் வாதாடப்பட்டது. இவ்வுரிமை உண்டு என்று உயர்நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்

## பிராமிசரி நோட்டில் 'ரூ 1100' என்று இருந்ததை '1200' என்று திருத்தி தவா செய்தவாதி ஜாடாத் தொகையையும் இழந்தார்.

[ஆதாரம்:—சென்னை ஹைகோர்ட் தீர்ப்பு. 70 லாவீக்லி 583.]

தேதிகளையும் ரூபாய் எண்ணிக்கைகளையும் கவனித்துப் படிக்கவும். பிராமிசரி நோட்டின்படி ரூ 1331 தமக்குப் பிரதிவாதியிடமிருந்து கிடைக்கவேண்டுமென்று வாதி முன்சீப் கோர்ட்டில் தவா செய்தார், வாதி தம்முடைய பிருதில்

சொல்லிய விஷயங்கள்:—15-12-1947ல் பிரதிவாதி தமக்கு ரூ. 1500 கடன் வேண்டுமென்று வாதியைக் கேட்டதாகவும், அன்ற தினம் வாதி பிரதிவாதிக்கு ரூ. 1100 மட்டில் கொடுத்து பாக்கியை ஒரு வாரத்தில் கொடுப்பதாகச் சொன்னதாகவும், ஆனால் பாக்கியைத் தம்மால் கொடுக்க முடியவில்லை என்றும்; ஆகையால் 20-12-1947-ல் பிரதிவாதி தமக்கு ரூ. 1100க்கு தாவாபிராம்சரிநோட்டு (அன்டிமாண்டு) எழுதிக் கொடுத்தாகவும், பிராமிசரி எழுதபட்ட, பிறகு, பிரதிவாதியின் வேண்டுகோளின் பேரில் வாதி இன்னும் ஒரு நூறு ரூபாய் கொடுத்ததாகவும், அதனால் பிரதி வாதியே பிராமிசரி நோட்டில் காணப்பட்டிருந்த ரூ. '1100' என்ற தொகையை ரூ. 1200' என்று தம்முடைய கையினாலேயே திருத்தி இருப்பதாயும், பிறகு 30-12-1948 ல் பிரதிவாதி ரூ. 78-12-0 கொடுத்து அவ் விவரத்தைத் தம்முடைய கையினாலேயே பிராமிசரி நோட்டில் வரவு வைத்திருப்பதாகவும்; 11-3-1950 பிரதிவாதி எழுதிக் கொடுத்திருக்கும் ஒரு அடமானப் பத்திரத்தில் வாதிக்குச் சேரவேண்டிய கடனை அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார் என்றும், ஆகையால் தாவாவுக்குக் காலாவதி ஆகவில்லை என்றும் வாதி பிளைதில் தெரிவித்திருந்தார்.

பிரதிவாதி கொடுத்த ஸ்டேட்மெண்டில் தாம் 15-12-1947-ல் வாதியிடம் யாதொரு தொகையும் வாங்கவில்லை என்றும், பிராமி சரி நோட்டு எழுதப்பட்ட தேதியாகிய 20-12-1947ல் தாம் வாதியிடம் ரூ. 1000 தான் கடனாக வாங்கியதென்றும், பிரதி வாதி 'விவசாயி' என்பதால் அசல் தொகையிலேயே ரூ 100 சேர்த்து வாதி ரூ 100-க்குத் தம்மிடமிருந்து வாதி பிராமிசரி நோட்டு எழுதி வாங்கியதாகவும்; வாதியே ஏதோ கெட்ட எண்ணங்கொண்டு '1100' என்பதை 1200' என்று பிறகு திருத்தியிருப்பதாகவும், திருத்தப்பட்ட பிராமிசரிநோட்டு செல்லாதென்றும் பிரதிவாதி கட்சி சொன்னார். மேலும் 22-5-1950ல் தமக்கு வாதியிடமிருந்து நோட்டீசு கிடைத்த ஒரு வாரத்திற்குள் தாம் வாதியிடம் ஜாடா அசல் வட்டியையும் வாதியிடம் கொடுத்து நோட்டு தீர்ந்துவிட்டதாகவும் பிரதிவாதி சொன்னார்.

பிரதிவாதி ஜாடா தொகையையும் வாதியிடம் கொடுத்துக் கடனை தீர்த்துவிட்டதாகச் சொல்லிய கட்சியை முன்சீப் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. பிராமிசரி நோட்டுத் தேதிக்கு முன்பே அதாவது 15-12-1947 தேதியிலேயே வாதியிடம் பிரதிவாதி ரூ. 1100 கடன் வாங்கிக்கொண்டார் என்றும்' பிராமிசரி நோட்டு தேதியில் மறுபடியும் வாதி ரூ. 100 கொடுத்ததாகச் சொல்வதை நம்பவில்லை என்றும் 'பிராமிசரி நோட்டில் '1100' என்பதை '1200' என்று பிரதிவாதியின் சம்மதமில்லாமலே வாதியே திருத்திவிட்டதாகவும் முன்சீப் முடிவு செய்தார். திருத்தப்பட்ட பிராமிசரி நோட்டு செல்லாதாகையால் அதன் பேரில் தீர்ப்புக் கொடுக்க முடியாதென்றும், அப்பிராமிசரி நோட்டுக்கு முன் தேதியிலேயே வாதியிடம் பிரதிவாதி வாங்கிய கடன் ரூ. 1100யும் 5½% வட்டியுடன் வாதிக்குப் பிரதிவாதி கொடுக்க வேண்டுமென்றும் முன்சீப் தீர்ப்பு செய்தார்.

பிரதிவாதி சப்கோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். சப்ஜட்ஜ் அவர்கள் இவ்வழக்கில் நடந்த விஷயங்களைப் பற்றி வேறு விதமான முடிவுக்கு வந்தார். அதாவது 15-12-1947ல் வாதியாதொரு தொகையும் கடன் கொடுக்கவில்லை. என்றும், பிரதி வாதிக்குத் தொகை கொடுக்கப்பட்டது பிராமிசரி நோட்டு எழுதப்படும் போது தான் என்றும், பிராமிசரி நோட்டை வாதியே திருத்திவிட்டதால் அது செல்லாதென்றும் பிராமிசரிநோட்டைத்தவிர வேறு எந்த ருசு அல்லது ஆதாரத்தைக் கொண்டும் தீர்ப்பளிக்க முடியாதாகையால் வாதியின் தாவாவை சப்ஜ் தள்ளி விட்டார்.

வாதி ஹைகோர்ட்டுக்கு இரண்டாவது அப்பீல் செய்தார். ஹைகோர்ட்டில் முதலில் இவ்வப்பீல் உயர் நீதிபதி கிருஷ்ணசாமிநாயுடு அவர்கள் முன் வந்தது. இவ்வழக்கில் ஒரு முக்கியச் சட்டப் பிரச்னை இருப்பதால் இதை இரண்டு உயர் நீதிபதிகள் விசாரிக்க வேண்டுமென்று அந்நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டதன் பேரில் ,இவ்வப்பீலை பிரதம நீதிபதி அவர்களும்

உயர் நீதபதி பஞ்சாபகேசய்யர் அவர்களும் சேர்ந்து விசாரித்துத் தீர்ப்பளித்திருக்கின்றனர்.

இரண்டாது அப்பீலில் சட்டப் பிரச்னைகள் மட்டில் தான் வாதாடப்படும். விஷயங்களை பற்றி கீழ் கோர்ட்டால் செய்யப்பட்ட முடிவுகளை அப்படியே வைத்துக்கொண்டு அவற்றிலிருந்து எழும் சட்டப் பிச்னைகளை மட்டில் உயர் நீதிபதிகள் ஆராய்ந்தனர். இவ்வழக்கில் எழுந்த சட்டப்பிரச்னை இதுதான்,

பிராமிசரிநோட்டுக்கள், செக்குகள், உண்டியல்கள், இவற்றைப்பறிய "நெகோஷ்யபிள் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் ஆக்ட்"—என்ற சட்டத்தின் 87-வது செக்ஷனில் பிராமிசரி நோட்டை எழுதி கொடுத்தவருடைய சம்மதமன்னியில் அப்பிராமிசரி நோட்டானது திருத்தப்பட்டிருந்தால், அது செல்லுபடி அற்றதாகப் போய்விடும் என்று வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பிரஸ்தாப வழக்கில், பிராமிசரி நோட்டை எழுதி வாங்கியவர் அதைத் திருத்தி விட்டார் என்று கேட்டார் முடிவு செய்து விட்டபடியால், அது செல்லாது. அதை ஆதாரமாகக் கொண்டு வாதிக்கு டிக்ரி கொடுக்க முடியாது. "எனக்குப்பிராமிசரிநோட்டுப் படி தொகை வேண்டாம். பிராமிசரி நோட்டுத் தேதிக்கு முன்பே நான் பிரதிவாதிக்கு ரூ 1100 கடன் கொடுத்து விட்டேன் அது எனக்குத் திருப்பக் கிடைக்க வேண்டும்"—என்று வாதி கேட்டார். இக்கட்சியை முன்சீப் அவர்கள் ஒப்புக்கொண்டு வாதிக்கு டிக்ரி செய்தாலும் முதல் அப்பீல் கோர்ட்டாராகிய சப்ஜட்ஜ அவர்கள் இதை ஏற்கவில்லை. ஏனென்றால் வாதி பிரதி பிரதிவாதிக்குக் கடன் கொடுத்தது பிராமிசரி நோட்டு எழுதப்படும் போது தான் என்று சப்ஜட்ஜ் அவர்கள் முடிவு செய்தார். பிராமிசரி நோட்டுத் தேதிக்குச் சில நாட்கள் முன்பே தான் பிரதி வாதிக்கு ரூ1100 கடன் கொடுத்ததாக வாதி சொன்னதை சப்ஜட்ஜ் நம்பவில்லை. பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்ததும் பணம் வாங்கியதும் ஒரே சமயத்தில் ஏற்பட்டிருந்தால்—அது சம்பந்தமாக ருசுச் சட்டத்தில் செக்ஷன் 91 என்ற ஷரத்தில் ஒரு விதி இருக்கிறது. அதாவது இரண்டு நபர்கள் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு, அந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்களைக் கண்டு அவர்கள் எழுத்து மூலம் ஒரு தஸ்தாவேஜு எழுதிக் கொண்டால், அவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் என்ன என்று ருசுப்பிக்க அவர்கள் எழுத்து மூலம் செய்து கொண்ட தஸ்தாவேஜியைக் கொண்டு ருசுப்பிக்கலாமே ஒழிய, வாய் மொழி சாட்சியங்களைக் கொண்டு ருசுப்பிக்க முடியாதென்பது தான் அவ்விதி. பிரஸ்தாப வழக்கில் வாதியிடம் பிரதி வாதி வாங்கிய கடன் சம்பந்தமான ஒப்பந்தத்தை அவர்கள் எழுத்து மூலம், (அதாவது ஒரு பிராமிசரி நோட்டு மூலம்) செய்து கொண்டார்கள். தங்களுடைய ஏற்பாட்டை இவர்கள் அப்பிராமிசரி நோட்டு மூலம் தான் ருசு செய்யலாமே ஒழிய, வாய் மொழி சாட்சியங்களினால் ருசுப்பிக்க முடியாது. திருத்தப்பட்ட பிராமிசரி நோட்டும் செல்லாது; வாய் மொழி சாட்சியமும் விடமுடியாதென்ற நிலைமையில் வாதியானவர் தாம் கொடுத்த கடனைப்பற்றி எவ்வித ருசுவும் விட முடியவில்லை. ஆகையால் அவருக்கு டிக்ரி கிடைக்காது.

இந்த நிலைமையில் வாதியின் சார்பில் வேறு ஒரு கட்சி வாதாடப்பட்டது. அதாவது "இந்தியன் கண்டிராக்ட் ஆக்ட்" என்ற இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் செக்ஷன்.65 என்ற ஒரு சட்ட விதி இருக்கிறது. அதாவது—"ஒரு ஒப்பந்தம் செல்லுபடியாகாமல் போய் விட்டால், அவ்வித ஒப்பந்தத்தின் கீழ் ஒரு நன்மையை அடைந்தவர் அதை யாரிடமிருந்து அடைந்தாரோ அவருக்கு அதைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும்"—என்பது தான் இவ்விதி. கடன் வாங்கிய விஷயமாக வாதியும் பிரதி வாதியும் செய்துகொண்ட பிராமிசரி நோட்டு என்ற ஒப்பந்தம் செல்லாமல் போய்விட்டது. ஆனால் அந்த ஒப்பந்தத்தின் கீழ் பிரதிவாதி வாதியிடமிருந்து ஒரு நன்மை அடைந்திருக்கிறார். அதாவது ரூ. 1100 அடைந்திருக்கிறார். அதை வாதிக்குப் பிரதிவாதி இவ்விதியின்படி திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்—என்று வாதிக்காக வாதாடப்பட்டது.

(தொடர்ச்சி 22-ம் பக்கம் பார்க்க)



# கேள்வியும் பதிலும்

[இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில்தான், அதன் பதில் பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவதும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுவதும் இயலாது. கேள்விகள் அனுப்பக் கட்டணம் எதுவும் கிடையாது. கேள்விகளைப் புரியும்படி மாற்றி அமைத்துக் கொள்ளவும் திருத்திக் கொள்ளவும் ஒவ்வொரு இதழுக்காகவும் சில கேள்விகளை மட்டில் பொறுக்கிஎடுத்துக் கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. கேள்வி கேட்பவர்களுக்கு இதை ஆட்சேபிக்கவோ, காரணம் கேட்கவோ உரிமை இல்லை. ஏற்றுக்கொள்ளப்படாத கேள்விகளைத் திருப்பி அனுப்புவது சாத்தியமல்ல.]

## தண்டனையும்—தேர்தலும்

கேள்வி; (L 341. நாச்சிமுத்து) லைசென்சு இல்லாமல் பிரைஸ் சீட்டு ஆரம்பித்து ஆனால் குறிப்பிட்ட தேதிகளில் குலுக்காமல் (லைசென்சு கிடைக்காததால்) சீட்டை நிறுத்திப் பணம் வாப்ஸ் கொடுக்கப்பட்டது. இதுபற்றி இ. பி. கோ. 294A செக்ஷன்படி போலீசாரால் கேஸ் போடப்பட்டு அபராதம் கட்டப்பட்டது. ஷை 294 (A) செக்ஷன்படி குற்றம் செய்தவரை தேர்தல் இதரப் பொது விவகாரங்களில் எந்த முறையில் பாதிக்கும்? எவ்வளவு நாளைக்கு?

பதில்: தேர்தல்கள் சம்பந்தப்பட்ட வரையில் மேற்கண்டபடி தண்டனை அடைந்தவருக்கு எவ்வித இடைஞ்சலுமில்லை. தேர்தல்களில் "வோட்டு" போடும் அவருடைய உரிமையோ, அல்லது பார்லிமெண்டு சபைக்கோ ராஜ்ய சட்ட சபைக்கோ மக்களுடைய பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படும் அவருடைய உரிமையோ மேற்கண்ட தண்டனையால் போய்விடாது. குற்றம் செய்ததற்காக இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட சிறைதண்டனை அடைந்தவர்கள்தான் சிறையிலிருந்து விடுதலையடைந்த ஐந்து ஆண்டுகள் வரை ஜனப்பிரதிநிதித்துவச் சட்டப்படி பார்லிமெண்டு அங்கத்தினராக வரவோ, ராஜ்ய சட்ட சபை சபை அங்கத்தினராகவரவோ முடியாது. பஞ்சாயத்துச் சட்டமும் இவரை பாதிக்கவில்லை. ஏனென்றால், ஒரு கிரிமினல் குற்றத்துக்காக ஆறு மாதத்துக்குமேல் சிறை தண்டனை அடைந்தவர்தான் விடுதலை அடைந்த ஐந்து வருடங்கள் வரை பஞ்சாயத்து மெம்பராக வரமுடியாது. முனிசிபல் சட்டமும் அப்படியே. மற்றப் பொது விவகாரங்கள் சம்பந்தப்பட்ட வரையில், இவ்வித அபராத தண்டனை அடைந்தவருடைய உரிமைகளைப் பாதிக்கும் சட்டங்கள் ஒன்றுமில்லை.

## திருமணச் சமயத்தில் கணவன் மனைவிக்கு எழுதிவைக்கும் செட்டில்மெண்டு பத்திரம்

கேள்வி: (L 342.) மூன்று இந்து சகோதரர்கள் நிலங்களைப் பாகப்பிரி

…னை செய்துகொண்டார்கள் ஒவ்வொருவரும் நிலங்களைப் பொறுத்து தனிப்பட்டாவும் செயதுகொண்டனர். பிறகு கடைசி சகோதரர் திருமணம் செய்துகொண்டார். திருமண சமயத்தில் மனைவிக்கு அவர் ஒரு செட்டில்மெண்டு பத்திரம் எழுதிக்கொடுத்தார். தம்முடைய சகோததர்களுள் நடந்த பாகப் பிரிவினையைக் காண்பிக்காமல் மூன்று பட்டா நிலங்களையும் காண்பித்து ஒவ்வொன்றிலும் தமக்கு 3ல் 1 பாகம் இருப்பதாகவும், அதில் சரி பாதியை மனைவிக்குச் செட்டில்மெண்டு செய்து கொடுப்பதாகவும்; பிறகு கணவன் மனைவியை சம்ரட்சணை செய்யாவிட்டால், கணவனுடைய மற்றப் பாதியும் மனைவியையே சர்வ சுதந்தரமாகச் சேருமென்றும் கண்டு மனைவிக்குச் செட்டில்மெண்ட் பத்திரம் செய்து கொடுத்தார். இப்பத்திரம் செல்லுமா? கணவனுடைய பாதி பாத்தியத்தையும் மனைவி எடுத்துக் கொள்ள முடியுமா?

பதில்: செட்டில்மெண்டுப் பத்திரம் எழுதிக்கொடுத்தவருக்குச் சொந்தமான சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வரையில்தான் செட்டில்மெண்டு செல்லும். அதாவது கடைசி சகோதரர் எழுதிவைத்த செட்டில்மெண்டானது, மற்ற இரு சகோதரர்களுடைய பாகச் சொத்துக்களைப் பாதிக்காது. செட்டில்மெண்டுப்படி மனைவியானவள் கணவனுடைய பாக சொத்துக்களில் சரி பாதியை உடனேயே அடைவாள். கணவன் மனைவியை சம்ரட்சணை செய்யாவிட்டால், அதுமுதல் மற்ற பாதியும் மனைவியைச் சேரும். சட்ட பரிபாஷையில் இதற்கு 'கண்டின்ஜெண்டு இண்டரஸ்டு' என்று சொல்லுவது. அதாவது ஒரு குறிப்பிட்ட சம்பவம் நேர்ந்தால் ஒருவர் சொத்தை அடையவேண்டுமென்று ஷரத்துக் கண்டிருக்கும் பத்திரங்களில்—அச்சம்பவம் எப்பொழுது ஏற்படுகிறதோ அப்பொழுதுதான் சொத்து அடைபவருக்குப் பாத்தியம் சித்திக்கும். கணவன் மனைவியை எதுமுதல் சம்ரட்சணை செய்யத் தவறினரோ, அப்பொழுது கணவனின் சொத்துக்களின் உரிமை மனைவிக்கு மாறிவிடும். சட்டப்படி இவ்வித செட்டில்மெண்டு செல்லும்.

## பஞ்சாயத்து எல்லைக்கு வெளியே இருப்பவர்மீது பஞ்சாயத்துக் கோர்ட்டில் தாவா செய்யலாமா?

கேள்வி: (L 348) பஞ்சாயத்துக் கோரட்டு எல்லைக்கு வெளியில் (10 மைலுக்குள்) இருக்கும் பிரதிவாதிமீது பஞ்சாயத்துக் கோர்ட்டில் தாவா போடலாமா?

பதில்: கிராமக் கோர்ட்டுச் சட்டத்தின் செக்ஷன் 15-ன்படி தாவா தொடரப்படும்போது எந்தப் பஞ்யாத்துக் கோர்ட்டின் அதிகார எல்லைக்குள் எல்லாப் பிரதிவாதிகளும் வசிக்கின்றனரோ, அல்லது தொழில் நடத்துகின்றனரோ அந்தக் கோர்ட்டில்தான் தாவா தொடரப்படவேண்டும்.

## 35 வருடங்களுக்குமுன் இறந்த இந்துவின் விதவை, கணவனுடைய சொத்துக்களைக் கிரயம் செய்யலாமா? அனந்தரவார்சுபாத்தியம் என்பது இப்போது உண்டா?

கேள்வி: (L. 360) இந்து சகோதரர்கள் இருவர் 40 வருடங்களுக்குமுன், பாகப் பத்திரம் எழுதி ரிஜிஸ்டர்செய்துகொண்டனர். அவரவர் பாகச் சொத்தை அவரவர் அனுபவித்து வந்தார். இருவரில் ஒருவர் மைனர் மகளையும் மனைவியையும் விட்டுவிட்டு 35 வருடங்களுக்குமுன் இறந்தார். அவருடைய மனைவியானவர் அம்மைனர் மகளைப் போஷித்தும் கல்யாணம் செய்துகொடுத்து, அம்மகளுக்குச் சந்ததி இல்லாமல் அவளும் விதவையாகிவிட்டாள். தாயும் மகளும் சொத்துக்களை அனுபவித்து அதன் வரும்படியைக்கொண்டு ஜீவனம் செய்துவருகின்றனர். இப்போது விலை வாசி ஏற்றத்தால் ஜீவனத்துக்கு வருமானம் போதாமல், சொத்தின் ஒரு பாகத்தைக் கிரயம் செய்யத் தாயும் மகளும் ஏற்பாடு செய்கிறார்கள். அவர்கள் செய்யும் கிரயம் செல்லுமா? 40 ஆண்டுகளுக்கு முன் பாகம் செய்துகொண்ட மற்ற பாகஸ்தருடைய பேரன்கள் ஆட்சேபனை செய்யலாமா? சொத்தில் அவர்களுக்கு அனந்தர வார்சு பாத்தியம் ஏற்படுமா?

பதில்: பாகம் செய்துகொண்ட பிறகு, 35 வருடங்களுக்கு முன் இறந்த சகோதாருடைய சொத்துக்களுக்கு அவருடைய மனைவிதான் வார்சு. முன்பு இருந்த இந்துச் சட்டப்படி இம் மனைவியானவள், சாதாரணமாகச் சொத்துக்களின் வருமானத்தை மட்டில் தன் ஆயுள் வரை அனுபவிக்கலாமென்றும், அவள் ஆயுளுக்குப் பிறகு, அச்சொததுக்களுக்கு அவளுடைய பெண் மகள்தான் வார்சு என்றும், அப்பெண் மகளும் இச்சொத்துக்களை அவளுடைய ஆயுள்வரை தான் அனுபவிக்கலாமென்றும், அவள் இறந்த பிறகு, அவளுக்கு ஆண் சந்ததி இல்லாத காரணத்தினல், அனந்தரவார்சுகள் சொத்தை அடைவார்களென்றும் இருந்தது. இது பழைய சட்டம். ஆனல் சமீபத்தில் 17—6—1956ல் அமுலுக்கு வந்த இந்து வார்சுரிமைச் சட்டத்தின் செக்ஷன் 14 என்ற ஷரத்தின்படி நிலைமை அடியோடுமாறி விட்டது. இச்சட்டம் வந்த தேதியில் கணவனுடைய சொத்துக்களை வார்சு முறைமையில் அனுபவித்துவரும் மனைவிக்கு 17-6-1956 தேதியில் அச்சொத்தில் பூர்ண உரிமை ஏற்பட்டுவிட்டது. இனி அவள் இஷ்டப்படி அச்சொத்துக்களைக் கிரயம் முதலிய எவ்விதப் பராதீனங்களும் செய்யலாம். இப்போது சொத்துக்கள் அவளுக்கு மட்டில்தான் பாத்தியம். அவளுடைய பெண் மகளுக்குக்கூட இப்போது பாத்தியம் இல்லை. தாய்மட்டில் கிரயம் செய்தாலே செல்லும். மகள் சேர்ந்து எழுதிக் கொடுக்கவேண்டிய அவசியம் கூட இல்லை. 40 ஆண்டுகளுக்கு முன் பாகம் செய்துகொண்ட மற்ற சகோதாருடைய பேரன்களுக்கோ, வேறு எவருக்கோ அனந்தரவார்சு பாத்தியமோ வேறு எவ்வித பாத்தியமோ கிடையாது. புதிய சட்டப்படி அனந்தரவார்சு பாத்தியம் என்பதே மறைந்து போய்விட்டது.

---

உலகத் தப்பக நிலையம்
187746
சென்னை-600 008

(19-ம் பக்கம் தொடர்ச்சி)

இக்கடனைப்பற்றிய சட்டப் பிரச்னையை ஆராயவே இவ்வழககின் இரண்டாவது அப்பீலை இரணடு உயர் நீதிபதிகள் சேர்ந்து விசாரித்தனா. இதைப்போல முன்பு ஏற்பட்ட சில வழக்குகளின் தீர்ப்புக்களையும் உயர் நீதிபதிகள் கவனித்து, வாதியின் இக்கடைசிக் கட்சியையும் உயர் நீதிபதிகள் எற்றுக்கொள்ளவில்லை. ஒப்பந்தச் சட்டத்தின் செக்ஷன் 65ல் கண்ட விதி இவ்வழக்குக்குப் பொருந்தாதென உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். ஏனென்றால், இவ்வழக்கில ஒப்பந்தம் ஒன்றும் செல்லுபடியாகாமல் போகவில்லை என்றும், ஒப்பந்தத்தைக் காண்பிக்கக் கூடிய தஸ்தாவேஜு தான் செல்லாமல் போயிற்றென்றும் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். முன்பு விளக்கப்பட்ட வேறு சட்ட விதிகளால் வாதி தன்னுடைய ஒப்பந்தத்தையே ருசுப்பிக்க முடியாமல் போய் விட்டதால் தான் வாதிக்கு இவ்வழக்கில் எவ்வித பரிகாரமும் அளிக்க முடியாதென உயர் நீதிபதிகள் அபிப்பிராயபபட்டு வாதி செய்த இரண்டாவது அப்பீலைச் செலவு தொகையுடன் தள்ளினர்.

கடன் தொகையைத் தாம் திருப்பிக் கொடுத்து விட்டதாகப் பிரதிவாதி சொல்லிய கட்சியையும் கோர்ட்டார் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படியிருந்தும் வாதிக்கு எவ்வித பரிகாரமும் அளிக்கப்படவில்லை. ரூ. 100 அதிகம் அடையலாமென்ற ஆசையினல் வாதி ஜாடாத் தொகையையும் இழந்தார்.

# "வக்கீல்"

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

தபால் பெட்டி 26, கும்பகோணம் (தென் இந்தியா)

உரிமையாளர்:
வக்கீல் பப்ளிகேஷன்ஸ்
(பிரைவேட்) லிமிடெட்.

காரியாலயம்:
73 டபீர் மேலவீதி
கும்பகோணம் (தென் இந்தியா)

## 1—4—1957 முதல் "வக்கீல்" சந்தா விபரம்

| | ரூ. | நயாபைசா. |
|---|---|---|
| வருட சந்தா (உள்நாடு) | 4 | 50 |
| வருட சந்தா (வெளிநாடு இலங்கை உள்பட) | 6 | 00 |
| தனிப்பிரதி | 0 | 40 |
| ஆயுள் சந்தா | 100 | 00 |

குறிப்பு:—"வருட சந்தா" என்பது சந்தா செலுத்தப்படும் தேதிக்குப்பின் பிரசுரமாகும் 12 தொடர்ந்த இதழ்களுக்கான சந்தாவைக் குறிக்கும். வருட சந்தாவில் தபால்சார்சும் அடங்கியதே. இரண்டு அல்லது அதிக இதழ்களைச் சேர்த்து "வக்கீல்" பத்திரிகையைப் புத்தக ரூபமாக வெளியிடப்படும்போதும் சப்ளிமெண்டுகள் வெளியிடப்படும்போதும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் விலையில் சரிபாதி விலைக்கு அவைகள் சந்தாதார்களுக்கு அனுப்பப்பட்டு அத்தொகை வருடசந்தாவில் ஈடு செய்துகொள்ளப்படும். இச்சலுகை ஒரு வருட சந்தாவுக்குக் குறையாத சந்தா கட்டுபவர்களுக்கு மட்டில்தான். வருட சந்தாவுக்குக் குறைவாகப் பணம் அனுப்புகிறவர்களுக்கு மேலே கண்ட தனிப்பிரதி விலைப்படி கணக்குச்செய்து பணம் உள்ளவரையில் பத்திரிகை அனுப்பப்பட்டுவரும், 1—4—1957-க்கு முன் சந்தா கட்டியவர்களுடைய கணக்கை நயாபைசாவுக்கு மாற்றி, மேலே கண்ட வருட சந்தா விகிதப்படி கணக்குச்செய்து அனுப்பப்படும். சந்தா இருக்கும் வரைதான் பத்திரிகை அனுப்பப்படும்,

## "வக்கீல்" பத்திரிகையின் மற்ற விவரங்கள்

"வக்கீல்" பத்திரிகை 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. மாதப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. "வக்கீல்" பொதுமக்களுக்குத் தேவையான புதிய அகில இந்தியச் சட்டங்களையும் சென்னைச்சட்டங்களையும், சட்டங்களை அனுசரித்துச் செய்யப்படும் விதிகள் முதலியவற்றையும் பொதுமக்கள் சுலபமாகத் தெரிந்து கொள்ளும் விதம் எளிய தமிழ் நடையில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப்பத்திரிகை. முக்கியமான சுப்ரீம்கோர்ட், ஹைகோர்ட்டுத் தீர்ப்புகளும் இப்பத்திரிகையில் விளக்கம் செய்யப்படுவதுடன், வரிகள், தொழிலாளர்பகுதி கேள்வி—பதில் போன்ற பல அம்சங்களும் உண்டு.

## வி. பி. பி. கிடையாது.

தயவுசெய்து சந்தாத்தொகையை மணியார்டர் மூலம் அனுப்பவும். வி. பி. பி. அனுப்புவதில்லை. மணியார்டர் கூபனில் தங்கள் பெயர், விலாசம், போஸ்டு, ஜில்லா இவ்விவரங்களைத் தயவுசெய்து புரியும்படி ஒவ்வொரு எழுத்தாக எழுதவும்.

இலங்கைச் சந்தாதார்கள்:—இலங்கைக்கு வி. பி. பி. அனுப்புவதிலும் மிகத் தொல்லையும் வீண் செலவும் இருப்பதால் வி. பி. பி. அனுப்புவதில்லை. இலங்கைச் சந்தாதார்கள் இலங்கையிலிருந்து மணியார்டர் செய்யமுடியாமல் இருந்தால் இந்தியாவிலிருக்கும் தங்கள் நேயர்கள் அல்லது காரியாலயத்தின் மூலம் சந்தாவை மணியார்டர்செய்து இலங்கை விலாசம் கொடுக்கவும்.

மலேயா, சிங்கப்பூர் முதலிய மற்ற அயல் நாடுகளிலிருக்கும் நேயர்கள் தங்கள் சந்தாவை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் வாங்கி ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பலாம்; அல்லது மணியார்டர் செய்யலாம்.

சந்தா மணியார்டர் செய்யவேண்டிய விலாசம்:—

மானேஜர்,
"வக்கீல்" காரியாலயம், 73 டபீர் மேலவீதி,
கும்பகோணம் (தென் இந்தியா).

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்




பிராஞ்சு : (**மன்னார்குடி**)

கூந்தலுக்கு வளர்ச்சியும் மூளைக்குக் குளிர்ச்சியும் கொடுப்பதில் நிகரற்ற சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், கோகுல் கூந்தல் தைலம், வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள், பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

*Sale Agents:*
For Madras
**SURAJ AGENCIES,**
**MADRAS.**

*For Coimbatore, Palghat & Nilgiris*
**B. BALAPATTABI CHETTIAR,**
249, Vysyal Street,
**COIMBATORE.**

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL PRESS, TIRUVIDAIMARUDUR AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A.,B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM FOR THE VAKIL PUBLICATIONS Private LIMITED, Editor: V. S. VIJAYARAGAVACHARI, B.A., B.L,